நவம்பர் 2003 NOVEMBER இதழ் 154 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION

கனடியத் தமிழர்கள் பங்குபற்றும் மிகப் பெரிய தேர்தல் திருவிழா இந்த மாதம் பத்தாம் திகதி கனடாவின் மார்க்கம் நகரில் நடைபெவுள்ளது. இத்தேர்தல் ஊடாக, யோர்க் பிரதேச சபைக்கு மார்க்கம் நகரப் பகுதியிலிருந்து நான்கு பிரதிநிதிகள் தெரிவாவர். இரண்டு தமிழர்கள் இதற்குக் களத்தில் குதித்துள்ளனர். ஆதலால், ஒரு தமிழரோடு இன்னொரு தமிழர் போட்டி போடுவதாக இதனைச் சொல்வது தவறாகும். மார்க்கம் நகர சபையின் 7ஆம் 8ஆம் வட்டார உறுப்பினர் பதவிகளுக்கு தலா ஒவ்வொரு தமிழர் போட்டியிடுகின்றனர். இவர்களும் தமக்கு[illegible]திரும் புதிருமாக போட்டியிடவில்லை. யோர்க் [illegible]விச் சபையின் 4ஆம் பிரிவுக்கான தர்[illegible]தா தேர்தலில் இரு தமிழர்களும் இன்[illegible] இனத்தவருமாக ஒரு பதவிக்கு மூ[illegible]போட்டியிடுகின்றனர். நீங்கள் மார்க்கம் [illegible]வாக்காளரா? 23ஆம் பக்கம் வாரு[illegible].



மாணவிகளின் கரகாட்டம்
கவின் கலாலயா ஆண்டு விழாவில்



முதியவருக்கும் கௌரவம்
உலகத் தமிழர் நூலகத்துக்கும் கௌரவம்
யாழ் நூல் வெளியீட்டு வைபவத்தில்

13வது ஆண்டில் 13th Year

Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box -3, Station 'F'
Toronto, ON. M4Y 2L4

Phone: (416) 920-9250
Fax: (416) 921-6576

**email:**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil
Information Centre
(ETHIC) of Toronto

**Published by**
Ahilan Associates
&
Thamil Information
Research Unit (THIRU)

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Senior Assistant Editor**
Vijay Ananth

**Assistant Editors**
Anton Kanagasooriyar
Sasi Pathmanathan

**General Manager**
S.T. Singam

**Public Relation**
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan
T. Thevendran
R. R. Rajkumar

**Technical Support**
Haran Graph &
Thamil Creators

**Typesetting**
**Layout & Design**
Ahilan Associates

**Printers**
Ahilan Associates
(416) 920-9250

**PUBLISHED MONTHLY**
4000 Copies


## ஆசிரியரிடமிருந்து . . . . . . . . . . . . FROM THE EDITOR

கனடியப் பிரதமர் ஜோன் கிரட்சியன் தமது பத்தாண்டு காலப் பிரதமர் பதவியை இந்த மாதத்துடன் பூர்த்தி செய்கின்றார்.

நாற்பதாண்டு கால அரசியல் வாழ்வில், தொடர்ச்சியாக அதன் காலாண்டுப் பகுதிக்கு ஒருவர் பிரதமராக இருந்திருக்கின்றாரென்றால், அது உண்மையிலே சாதனைதான்!

இதனால், அனைவரதும் பாராட்டுக்கு உரியவராக நிற்கின்றார் கிரட்சியன்.

தமது கட்சியை ஆட்சிக்கு ஏற்றினால், முன்னைய அரசினால் அறிமுகம் செய்யப்பட்ட ஜி. எஸ். ரி வரியை அறவே நீக்குவேன் என்று உறுதி கூறி வெற்றி வாகை சூடியவர் இவர். 1993ம் ஆண்டில் நடைபெற்றது இது.

ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் அதனைச் செய்ய முடியாது என்று கூறியவாறே அடுத்தடுத்த பொதுத் தேர்தல்களிலும் வென்று, தொடர்ந்து தமதாட்சியை ஒரு தசாப்தத்துக்குத் தக்க வைத்தவர் என்றால், அவரது அரசியல் ஆளுமையையும், ஆழமான சாணக்கியத்தையும் புரிந்து கொள்ளலாம்.

முடிசூடா மன்னராகத் திகழ்ந்த இவரது ஆற்றல் வியப்புக்குரியது. முக்கியமாக அமெரிக்காவுக்கு அடி பணிய மறுத்த தன்மையும், கியுபாவுடனான உறவினைத் துண்டிக்க மறுத்தமையும், ஈராக்குக்கு எதிரான போருக்கு ஆதரவு வழங்க இணங்காத தொடர் நிலையும் இவரது தனித்துவத்தை உலகறியச் செய்தன.

இருப்பினும் அண்மைய காலங்களில் இவரது போக்கு உள்நாட்டு அரசியலில் செல்வாக்கு இறக்கத்தினையே காட்டி நிற்கின்றது.

பிரதானமாக, கட்சியின் அடுத்த தலைவர் தெரிவில் முன்னாள் நிதியமைச்சர் போல் மார்ட்டினுக்கு எதிராக இவர் நடந்துகொண்ட முறை அரசியல் நாகரிகமற்ற தோற்றத்தினை வழங்கியுள்ளது. இன்றும் அதே நிலைதான்!

அடுத்தாண்டு பெப்ரவரியில் அரசியலுக்கு முழுக்குப் போடுகின்றார். அதாவது, உத்தியோகபூர்வமாக அரசியலிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அதற்கு முன்னர், இப்போது 'ஓய்வுக்கு முந்திய உலகம் சுற்றும் வாலிபனாக' சர்வதேசப் பயணத்தினை மேற்கொண்டுள்ளார்.

கனடிய தேசியப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக இதனை விமர்சித்து வருகின்றன. இதனையிட்டுக் கிஞ்சித்தும் அக்கறையில்லாதவராக மக்களின் வரிப்பணத்தில் கிரட்சியன் தமது பயணத்தைத் தொடர்ந்து வருகின்றார்.

இந்த மாதம் 12 முதல் 15 வரை ரொறன்ரோவில் நடைபெறவுள்ள மத்திய லிபரல் கட்சித் தலைவராக போல் மார்ட்டின் தெரிவாவது உறுதியாகிவிட்டது.

கனடியத் தமிழர்களோடு அவர்களின் தமிழ்ப் புத்தாண்டு வைபவத்தில் இரவு போசனம் உண்டமைக்காக 'புலி ஆதரவாளர்' என்றும், 'பயங்கரவாதி-களின் நண்பர்' என்றும் 'நாஷனல் போஸ்ட்'டினால் முத்திரை குத்தப்பட்டவர் போல் மார்ட்டின்.

அவர் கட்சித் தலைவரானால், அவரே அடுத்த பிரதமர். அடுத்த பொதுத் தேர்தலில் லிபரல் கடசி வெற்றி பெறுமானால், மேலும் ஐந்தாண்டுகள் பிரதமர் பதவியை போல் மார்ட்டின் வகிக்க முடியும்.

இவரது வெற்றியில் நாடு முழுவதுமுள்ள தமிழர்கள் உட்பட்ட சிறுபான்மை இனங்களுக்கு நிரம்பிய பங்குண்டு. இதுவும் 'போஸ்ட்"டுக்குத் தெரியும். எனவே போல் மார்ட்டின் பிரதமரான பின்னரும் அவருக்கு எதிரான கண்டனங்களை எதிர்பார்க்கலாம்.

மார்ட்டின் இந்த மாத நடுப்பகுதியில் கட்சியின் தலைவரானாலும், உடனடியாகப் பிரதமராக முடியாது. கிரட்சியன் அடுத்த பெப்ரவரியிலேயே பதவி விலகுவேன் என்று விடுத்த அறிவிப்பே இதற்குக் காரணம்.

கிரட்சியனின் இந்தச் சர்வாதிகாரப் போக்கே அவரது செல்வாக்கை மெதுமெதுவாக உள்நாட்டில் சரித்து வருகின்றது.

'என்னால் கட்சி வளர்ந்தா; கட்சியால் நான் வளர்ந்தேனா"' என்று கிரட்சியன் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கட்சி நலனில் அக்கறையிருந்தால், மீண்டும் லிபரலே பதவிக்கு வரவேண்டும் என்ற எண்ணமும் இருந்தால், பிரதமர் கிரட்சியன் செய்ய வேண்டியது, புதிய தலைவர் தெரிவானதும் தாம் பதவி விலகுவதே!

தமக்கும் மார்ட்டினுக்குமிடையிலான தனிப்பட்ட குரோதங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு, ஜனநாயக பாரம்பரியத்துக்கு கிரட்சியன் மதிப்பளிக்க வேண்டும்.

பதவிக்கு வரும்போது இருந்த கௌரவத்தை, பதவி விலகிச் செல்கையிலும் பேணவேண்டியது அரசியல் தலைவர்களின் பண்பு.

இதனையே கிரட்சியனிடமிருந்தும் மகாஜனங்கள் எதிர்பார்க்கின்றனர்.

திரு எஸ். திருச்செல்வம்


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585



**ஸ்தாபிதம்**
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station 'F'
Toronto, ON. M4Y 2L4

போன் : (416) 920-9250
பக்ஸ்: (416) 921-6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

**தயாரிப்பு**
ஈழத்தமிழர்
தகவல் நிலையம்
ரொறன்ரோ

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்
&
தமிழர் தகவல்
ஆய்வுப் பிரிவு

**பிரதம ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**மூத்த உதவி ஆசிரியர்**
விஜய் ஆனந்த்

**உதவி ஆசிரியர்கள்**
அன்ரன் கனகசூரியர்
சசி பத்மநாதன்

**பொது முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்

**பொதுமக்கள் தொடர்பு**
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்
ரி. தேவேந்திரன்
ஆர். ஆர். ராஜ்குமார்

**[illegible]ழில்நுட்ப உதவி**
ஹரன் கிறாப் &
[illegible]மிழ் கிரியேட்டர்ஸ்

**ஒளி [illegible]-வடிவமைப்பு**
அகி[illegible] அசோஷியேற்ஸ்

**அச்சுப்பதிப்பு**
[illegible]அசோஷியேற்ஸ்
(416) 920-9250

**[illegible]மாதாந்த வெளியீடு**
4000 பிரதிகள்

## கனடிய அடையாள அட்டை கைவிடப்படலாம்

சகல கனடியர்களுக்குமென அறிமுகம் செய்யப்படவிருந்த அடையாள அட்டைத் திட்டம் மத்திய குடிவரவு அமைச்சினால் கைவிடப்படலாமென்று தெரிகின்றது.

நாடளாவிய ரீதியில் புதிய அடையாள அட்டைக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பலை காரணமாக கனடிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சர் டெனிஸ் கோடரே இந்த முடிவை எட்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதேசமயம், நாட்டின் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு விடயங்களுக்கெனச் சில மாற்றுத் திட்டங்கள் கொண்டுவரப்படலாம் என்று அமைச்சர் கோடிகாட்டியுள்ளார். செப்டம்பர் 11 அமெரிக்க தாக்குதலே இவ்வாறான புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குக் காரணமாகும்.

கைவிரல் அடையாளம், ஒளிப்படம் ஆகியவைகளுடன் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய அடையாள அட்டையைக் கொண்டுவர முடிவுசெய்த மத்திய அரசாங்கம் அதற்கான மசோதாவையும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது.

ஆனால் இதனைப் பரிசீலனை செய்த நாடாளுமன்ற குடிவரவுக் குழு பல லட்சக் கணக்கான டாலர்கள் இதற்குச் செலவிடப்படுகின்றபோதிலும் எதிர்பார்க்கப்படும் நன்மை இதனால் கிட்டாதென்றும், மறுபுறத்தில் தனிநபர் சுதந்திரத்தை இந்த அடையாள அட்டை பறிக்கலாமென்ற அச்சம் மக்களிடையே அதிகரித்துள்ளது என்றும் கூறியிருந்தது.

இதனையடுத்தே இந்தத் திட்டத்தைக் கைவிட நேரலாமென்று கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர், உலகின் நூறு நாடுகளில் இவ்வகையான அடையாள அட்டை அமலில் இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போது பெரிய பிரித்தானியாவில் உள்ளது போன்ற அடையாள அட்டையை இங்கு அறிமுகம் செய்ய ஆகக்குறைந்தது ஏழு பில்லியன் டாலர்கள் செலவாகலாம்.

## உள்நாட்டு 'லான்டட்' விண்ணப்பங்கள் தேக்கநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன

கனடாவுக்குள்ளிருந்து லான்டட் அந்தஸ்துக்கு விண்ணப்பித்தவர்களும், வேலை அனுமதி மற்றும் இது போன்ற வேறு அனுமதிக்கு விண்ணப்பம் செய்தவர்களும், முன்னெப்போதுமில்லாத நீண்ட காலதாமதத்தைச் சந்திக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான தேக்கநிலை எவ்வாறு உருவானதென்று சரியாகச் சொல்ல முடியாத நிலையில் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் தவிக்கின்றனர். அண்மையில் திடீரென ஏற்பட்ட மின்வெட்டினால் அலுவலகக் கணினிகளுக்கு ஏற்பட்ட 'நோய்' ஒரு காரணம் என்று சில அதிகாரிகள் கூறினாலும் அது நம்பத் தகுந்ததாகவில்லை.

வாழ்க்கைத் துணைவர் தகுதிக்குள் கனடாவுக்குள்ளிருந்து லான்டட்டுக்கு விண்ணப்பித்தவர்களே மிக மோசமான காலதாமதத்தைச் சந்தித்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

கனடாவுக்குள் லான்டட் அந்தஸ்து அல்லது பிரஜாவுரிமை அந்தஸ்துள்ள ஒருவரைத் திருமணம் செய்த பின்னர் கனடாவுக்குள்ளிருந்து லான்டட்டுக்கு விண்ணப்பிப்பவர்களே இந்த வகையினுள் அடங்குவர்.

அகதியாக ஏற்கப்பட்டு லான்டட்டுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் இதற்குள் அடங்கமாட்டார்கள்.

இவ்வாறான உள்நாட்டு விண்ணப்பங்களின் பரிசீலனைக் காலம் (Processing time) 90 நாட்களே. இக்காலப் பகுதிக்குள் சம்பந்தப்பட்ட விண்ணப்பம் கொள்கையளவில் ஏற்கப்பட்டதா (an approval in principle) என்ற கடிதம் விண்ணப்பதாரிக்குக் குடிவரவுத் திணைக்களத்தால் அனுப்பப்பட வேண்டும்.

இவ்வாறான கடிதம் கிடைக்கப்பெற்றால் மட்டுமே விண்ணப்பதாரிகள் வேலை அனுமதியைப் (Employment authorization or work permit) பெறுவதற்கு அருகதையுடையவர்.

சம்பந்தப்பட்ட லான்டட் விண்ணப்பதாரிகள் இந்தத் தாமதம் காரணமாக, பல வேலைகளைப் பெறுவதற்கான தகுதியிருந்தும் அதனை இழக்கும் நிலை தொடர்ந்து வருகின்றது.

சாதாரணமாக, லான்டட் விண்ணப்பங்களின் பரிசீலனை காலம் ஆறு முதல் ஒன்பது மாதங்களாகியுள்ளதாக அல்பேட்டாவின் வெகர்வில் குடிவரவு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கனடா முழுவதற்குமான 'உள்நாட்டு லான்டட் விண்ணப்பங்களைப்' பரிசீலனை செய்யும் அலுவலகம் இது மட்டுமேயாகும்.

வேலை அனுமதி மற்றும் கற்றல் அனுமதிகளையும் இந்த வெகர்வில் குடிவரவு அலுவலகமே வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது விண்ணப்பத்தின் நிலைவரத்தினை குடிவரவுத் திணைக்கள இணையத்தளத்தின் வழியாகத் தெரிந்துகொள்ள முடியும். தங்களது Client ID இலக்கத்தைச் சரியாகத் தெரிந்து வைத்திருந்தால் மட்டுமே இணையத் தள வசதியைப் பயன்படுத்த முடியும்.

சிலருக்குக் கணினி வாசயும், பயன்பாட்டு அறிவும் இல்லாததால் தங்களிடம் பாதுகாப்பாக இருக்க வேண்டிய தங்களது client ID இலக்கத்தை வேறு ஆட்களிடம் கொடுத்து அவர்கள் ஊடாக உதவி பெற நாடுகின்றனர்.

"இது மிகவும் ஆபத்தான நடைமுறை" என்று எச்சரிக்கும் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள், இதனால் ஏற்படக்கூடிய துஷ்பிரயோகங்களுக்குத் தாங்கள் பொறுப்பேற்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆள்மாறாட்டம், ஆவணங்கள் விலாசம் மாறிச் செல்லுதல், மோசடி போன்றவை-களுக்கு இது கடந்த காலங்களில் வழிவகுத்துள்ளதாகவும், மிக நம்பிக்கை-யானவர்களைத் தவிர்ந்தவர்களுக்கு எதனையும் தெரிவிக்கக்கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகின்றது.

**எஸ்தி**

# Ethnic Diversity Survey

Statistics Canada's new Ethnic Diversity Survey shows immigrants have a strong sense of identification with their cultural or ethnic background.

The recently released survey was developed to provide information on the ethnic and cultural backgrounds of people in Canada and what role their backgrounds play in their lives today.

The survey covered topics such as ethnic or cultural ancestry and identity, family background, religion, language use, social networks, interaction with others and civic participation.

* Nearly three-quarters (71%) of immigrants who arrived in Canada from 1991 to 2001 rated at least one of their ancestral origins as important, compared with 65% of immigrants who came prior to 1991

* Immigrants, regardless of time of arrival in Canada, were also more likely to participate in ethnic or immigrant associations than were Canadian-born people. About 6% of immigrants were members of, or participated in, these organizations, compared with 1% of those who were two or more generations in Canada.

* The vast majority of all Canadians aged 15 and over (93% or 20.4 million) said they had never, or rarely, experienced discrimination or unfair treatment because of their ethno-cultural characteristics.

* People of non-European descent accounted for 13% of the population aged 15 and over, or 2.9 million. The most frequent origins were Chinese and East Indian. (Non-Europeans have origins in places such as Asia, Africa, Central and South America, the Caribbean, Australia and Oceania.)

* In 2002, almost one-quarter (23%) of Canada's population aged 15 and over, or 5.3 million people were first generation, that is, they were born outside Canada. Not since 1931 has the proportion of people born outside the country been this high.

For more information on the Ethnic Diversity Survey please visit Statistics Canada

**The John Webb Graham Q.C. Multicultural Scholarships: Rogers Broadcasting Limited and Ryerson Polytechnic University have joined forces to increase Canada's Multicultural Profile in television.**

## ROGERS BOOSTS MULTICULTURALISM THROUGH RYERSON SCHOLARSHIPS

In 1987, Rogers established three scholarships for students of ethnocultural or Native background who are admitted to the Ryerson degree program in Radio and Television Arts. In 1994, a fourth scholarship was added, targeted (sic) to a student from the greater Ottawa area, in recognition of the recent approval of the extension of CFMT's signal into the nation's capitol.

The scholarships pay a student's full tuition fees for each of the four years of the program. In 1993, this unique support for the multicultural broadcasting was named in honour of John Webb Graham, Q.C. upon his retirement from a distinguished legal and business career. In addition to serving as chairman of Rogers Communications Inc. and Rogers Broadcasting Limited, Mr. Graham was a partner in the Toronto law firm Cassels, Brock, and Blackwell.

Rogers has been dedicated to multicultural and multilingual broadcasting in cable for the last 20 years. In 1986, the Canadian Radio and Television Communication (sic) approved its acquisition of CFMT-TV (Channel 47- Toronto). It is as a result of its direct involvement with Canada's first and only multilingual/multicultural television station that Rogers Broadcasting offer these four scholarships.

The John Webb Graham Q.C. Multicultural Scholarships will expand career opportunities in television for Canadians of ethnocultural or Native background who are either Canadian citizens or permanent residents. Applicants must speak English and be fluent in their mother tongue, which may include a Native language. Ryerson's Bachelor of Applied Arts (Radio and Television Arts) program prepares graduates to perform a wide variety of tasks which comprise the profession of broadcasting. Applicants are required to submit a 500- word essay explaining their reasons for choosing a career in television and should attach a separate sheet to the essay, indicating their interest in being considered for a John Webb Graham Q.C. Multicultural Scholarship. The language commonly spoken at home should be identified if other than English. Applicants should also identify if they are applying specifically for the Ottawa scholarship. Full admission requirements for the RTA program are covered in the Ryerson calendar.

Full details on admission requirements are available from the Office of Admissions/ Liaison/ Curriculum Advising, Ryerson Polytechnic University, 350 Victoria Street, Toronto, Ontario M5B 2K3

# ஒன்ராறியோவில் லிபரல் கட்சியின் புதிய அரசாங்கம் டால்ரன் தலைமையில் 23 பேர் கொண்ட அமைச்சரவை



கடந்த மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற ஒன்ராறியோ மாகாண அரசுக்கான தேர்தலில் அமோக வெற்றி பெற்றதையடுத்து அதன் தலைவர் டால்ரன் மக்கன்ரி தலைமையிலான அரசாங்கம் கடந்த மாதம் ஆட்சியைப் பொறுப்பேற்றது. அன்றைய தினமே 23 பேர் கொண்ட மந்திரி சபையும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டது.

புதிய அரசாங்கம் சொன்ன விடயங்களை நிறைவு செய்யும் என்னும் நம்பக்கை சகல மக்களுக்கும் உள்ளது. செய்யத தவறின் அடுத்த தேர்தலல. மண்ணைக் கவ்வுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்பது பொதுவான அபிப்பிராயம்.

தமிழ் மக்கள் மத்தியில் நீண்ட காலமாக நன்கு பிரபல்யமான ஜோர்ஜ் சிமித்தர்மன் (சுகாதார அமைச்சர்), டேவிட் கப்பிளான் (வீடமைப்பு உட்பட்ட உட்கட்டுமான சீர்திருத்த அமைச்சர்), ஜெராட் கென்னடி (கல்வி அமைச்சர்), ஜெரி பிலிப்ஸ் (அமைச்சரவை நிர்வாகத் தலைவர்) ஆகியோர் அமைச்சர்களாகியுள்ளனர்.

அமைச்சரவையில் ஏழு பேர் ரொறன்ரோ மாநரப் பகுதிகளிலிருந்து தெரிவானவர்கள். இருவர் ரொறன்ரோ பெரும்பாகத்தைச் சேர்ந்தவர்கள். மூவர் ஒட்டாவா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இருவர் சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள். நால்வர் பெண்கள்.

புதிய அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அளவுக்கு நிதிப் பற்றாக்குறை இருப்பதாக சொல்லப்படுகின்றது. முன்னைய அரசாங்கம் திறைசேரியில் விட்டுச் சென்றுள்ள பற்றாக்குறை 5.ப பில்லியன் டாலர்கள் என்று மாகாண கணக்காய்வாளர் அறிவித்துள்ளார்

இதன் காரணமாகப் புதிய முதல்வர் டால்ரன் மக்கன்ரி மூக்கில் விரலை வைத்துப் புருவத்தை உயர்த்துகின்றார். இது நல்ல அறிகுறியாகத் தெரியிவில்லை. இவரும் இன்னொரு ஏர்ணி ஈவ்ஸ் ஆகலாம் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

வீட்டுரிமையாளர்கள் தம்மிஷ்டத்துக்கு வாடகையை உயர்த்தும் தற்போதைய சட்டத்தை ரத்துச் செய்து, வாடகைக் குடியிருப்பாளருக்கு உதவும் புதிய சட்டத்தை உருவாக்குவதே தமது முன்னுரிமை என்று அமைச்சர் டேவிட் கப்ளான் அறிவித்துள்ளார். அடுத்த வருட ஆரம்பத்தில் புதிய சட்ட மூலம் வரக்கூடும். ரொறன்ரோ, ஹமில்டன், ஒட்டாவா பிரதேச கல்விச் சபைகளில் வெட்டுகளை நடைமுறைப்படுத்த முன்னைய அரசினால் கொழுத்த சம்பளத்தில் நியமிக்கப்:பட்ட மேற்பார்வையாளர்கள் மூவரும் அக்டோபர் 31ம் திகதியுடன் வீட்டுக்குச் சென்று விட்டனர். இதனைப் பாடசாலைச் சமூகம் வரவேற்றுள்ளது.

மறுபுறத்தில், மின் கட்டணம் எந்த வேளையிலும் அதிகரிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சுகாதாரம், வீட்டு வசதி, கல்வி ஆகிய மூன்றுக்கும் அமைச்சர்களாகியுள்ளவர்கள் மீதான நம்பிக்கை காரணமாக, மொத்தத்தில் அரசின் மீதுள்ள நம்பிக்கையை மக்கள் இழக்காதுள்ளனர்.

புதிய அமைச்சர்களாகப் பதவியேற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

Premier and Intergovernmental Affairs: Dalton MCGuinty (Ottawa - South).
Finance: Greg Sorbara (Vaughan-King-Aurora)
Health and Long-Term Care: George Smitherman (Toronto-Centre-Rosedale). Education: Gerard Kennedy (Parkdale-High Park)
Community and Social Services: Sandra Pupatello (Windsor-West)
Natural Resources: Dave Ramsay (Timiskaming-Cochrane)
Children Services/Citizenship and immigration: Marie Bountrogianni (Hamilton-Mountain). Energy: Dwight Duncan (Windsor-St.Clair)
Community Safety and Correctional Services: Monte Kwinter (York Centre). Attorney-General: Michael Bryant (St.Paul's)
Agriculture and Food: Steve Peters (Elgin-Middlesex- London)
Management Board: Gerry Phillips (Scarborough -Agincourt)
Environment: Leona Dombrowsky (Hastings-Frontenac-Lennox and Addington).
Public Infrastructure and Renewal: David Caplan (DonValley East).
Tourism and Recreation: Jim Bradley (St.Catharines). Northern Development and Mines: Rick Bartolueei (Sudbury). Economic Development and Trade: Joe Cordiano (York South-Weston).
Labour: Chris Bentley (London West)
Consumer and Business Services: Jim Watson (Pttawa West-Nepean)
Transportation: Harinder Takhar (Mississauga Centre)
Municipal Affairs: John Gerretsen (Kingston and the Islands)
Training, Colleges and Universities: Mary Anne Chambers (Scarborough East)
Culture/Francophone Affairs: Madeleine Meilleur (Ottawa-Vanier)

# ஆரம்ப கணிதம் - பெற்றோர் அறிய வேண்டிய அடிப்படைகள்

## செப்டம்பர் மாத தொடர்ச்சி

இடப்பெறுமானங்கள் பற்றிய பூரண விளக்கமின்மை 9,10ம் தரங்களிலுள்ள மாணவர்களிடையேயும் இருந்ததை இங்கேயும், தாயகத்திலும் நான் படிப்பித்த பொழுது அவதானிக்கக் கூடியதாயிருந்தது. ஈரிலக்க எண்ணொன்றின் ஓராம் இடத்திலக்கம் ‘a’, பத்தாம் இடத்திலக்கம் ‘b’ அவ்வெண்ணை எழுதுக எனக் கேட்டால், ‘ba’ என்றுதான் இத் தரங்களிலுள்ள மாணவர்களில் பெரும்பான்மையோர் எழுவதை நான் அவதானித்துள்ளேன். ஓராமிடத்திலக்கம் 3 ஆகவும் பத்தாமிடத்திலக்கம் 2 ஆகவும் கொண்ட எண்ணை எழுதுக என்று கேட்டால் ‘23’ என்று தான் எல்லா மாணவர்களும் எழுதுவார்கள் என்பதை நாம் எதிர்பார்க்கலாம். அப்படியாயின் ஓராமிடத்திலக்கம் ‘a’ ஆகவும் பத்தாமிடத்திலக்கம் ‘b’ ஆகவும் கொண்ட எண்ணை ‘ba’ என்று எழுதியதற்கான காரணம் எண் குறியீடுகள் பற்றிய பூரண விளக்கமின்மையும் அத்துடன் ‘ba’ என்ற எழுத்துக் குறியீட்டின் கணித ரீதியான கருத்து bXa எனக் கருதாததுமே ஆகும். 23 எனும் இலக்கக் குறியீட்டின் கருத்து 2X3 அல்ல. 2X10+1X1=20+3 ஆகும். ஆகவே ஓராமிடத்திலக்கம் a ஆகவும் பத்தாமிடத்திலக்கம் b ஆகவும் கொண்ட எண்ணின் குறியீடு bX10+aX1. அதாவது சுருக்கின் 10b+a ஆகும். அதை b0+a எனக்குறியிட முடியாது. ஏனென்றால் b0=bX0=0. இந்த வகையில் எண் குறியீடுகளின் கருத்தை விளங்கி நிலைப்படுத்தும் வகையில், எண் குறியீடு அப்பியாசங்கள் அமைய வேண்டும். உதாரணமாக 2935 என்ற எண் குறியீட்டின் கருத்து 2000+900+30+5 என்பது போன்ற அப்பியாசங்கள். அதாவது,
$2935=2000+900+30+5=2*10^3+9*10^2+3*10^1+5X10^0$. இந்த வகையில் எமது வழக்கில் இருக்கும் எண்ணல் முறை தசம முறை எனப்படும். இம்முறையில் 0,1,2,3,4,5,6,7,8,9 ஆகிய 10 அடிப்படை எண் குறியீடுகள் உள. அதே போன்று இலக்க உலகில் (Digital world) 0,1 ஆகிய இரண்டு அடிப்படைக் குறியீடுகளைக் கொண்ட துவித முறை (Binary system) பாவித்தே எண்கள் குறியிடப்படுகின்றன. அதாவது 11 என்ற துவித முறை எண்ணின் கருத்து $1X^1+1X2^0=3$
எமது வழக்கிலுள்ள சில தசம முறை எண்களும் அவற்றிற்கு சமமான துவித முறை எண்களும், அவற்றை ஒன்றிலிருந்து ஒன்றிற்கு மாற்றுவதற்கான இரு உதாரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன:

| தசம முறை | துவித முறை | தசம முறை | துவித முறை |
|---|---|---|---|
| 0 | 0 | 7 | 111 |
| 1 | 1 | 8 | 1000 |
| 2 | 10 | 9 | 1001 |
| 3 | 11 | 10 | 1010 |
| 4 | 100 | 11 | 1011 |
| 5 | 101 | 12 | 1100 |
| 6 | 110 | 13 | 1101 |

உதாரணம் 1.

```
2|3
  1-1 ──► ஓராம் இடம் (1*2^0)
   └──► இரண்டாம் இடம் (1*2^1)
```

உதாரணம் 2.

```
2|13
2|6 - 1  ──► ஓராம் இடம் (1X2^0)
2|3 - 0  ──► இரண்டாம் இடம் (1X2^1)
  1 - 1  ──► நான்காம் இடம் (1X2^2)
   └──────► எட்டாம் இடம் (1X2^3)
```

துவித முறை எண் தசம முறை எண்ணாக மாற்றப்படல்

உதாரணம் 1.

```
1 1 0 1
 *2
  2
 +1
  3
 *2
  6
 +0
  6
 *2
 12
 +1
 13
```

உதாரணம் 2.

```
1 1 0
 *2
  2
 +1
  3
 *2
  6
 +0
  6
```

இம்மாற்ற முறைகளை நோக்கும் பொழுது, முதல் இரண்டு உதாரணங்களும் கீழினத்தை மேலினங்களாக அதாவது மில்லிமீற்றரை, கிலோமீற்றர், மீற்றர், சென்ரிமீற்றர் ஆகிய மேலின அலகுகளில் கூறுவது போன்றது. இரண்டாம் வகை உதாரணங்கள் மேலின அலகுகளை கீழின அலகுக்கு அதாவது கிலோமீற்றர், மீற்றர் போன்றவற்றை மில்லிமீற்றர் போன்ற கீழின அலகில் உரைப்பது போன்றதாகும். என்னைப் போன்று தாயகத்தில் படித்தவர்களுக்கு அங்குலத்தில் தரப்பட்ட அளவை மைல், பெர்லாங், சங்கிலி, யார் ஆகிய அலகுகளிற்கு மாற்றல் அல்லது மைல், பெர்லாங்கில் தரப்பட்ட அளவை அடி அங்குலத்திற்கு மாற்றல் போன்றவை ஞாபகமிருக்கலாம். எனவே ஒரு முறையிலுள்ள எண்களை இன்னொரு முறைக்கு மாற்றுவது, கணியம் (Quantity) ஒன்றை ஓரலகிலிருந்து இன்னொரு அலகிற்கு மாற்றுவது போன்றதாகும். (Conversion from one unit to another). அது போன்றே எண்களின் கூட்டலும் கழித்தலும் கணியங்களின் கூட்டல் கழித்தல்களுடன் ஒத்திருக்கின்றன. அதாவது எண்களைக் கூட்டும் போதோ, கழிக்கும் போதோ இடப்பெறுமானங்களைக் கருத்திற் கொண்டே அவற்றைச் செய்கின்றோம். கணியங்களைக் கூட்டும் போதோ கழிக்கும் போதோ கணிய அலகுகளின் அட்டவணையைக் கருத்திற் கொண்டே அவற்றைச் செய்கின்றோம். அந்த வகையில் மெத்திரிக் அலகுகளில் தரப்பட்ட கணியங்களை இன்னொரு மெத்திரிக் அலகிற்கு மாற்றுவதோ அல்லது அவற்றைக் கூட்டுவதோ கழித்தலோ, எண்களை ஒரு முறையிலிருந்து இன்னொரு முறைக்கு மாற்றுவதோ அல்லது அவற்றை கூட்டல் கழித்தல்களுடன் ஒத்திருக்கின்றன. அதுவுமல்லாமல் இச் செய்பாடுகள் இலகுவானவையுமாகும். காரணம், இடப் பெறுமானங்கள் ஒன்று மற்றொன்றின் பத்தின் பெருக்கங்களாகவோ அல்லது உபபெருக்கங்களாகவோ (sub-multiple) இருப்பதே. அதே போன்றே மெத்திரிக் அலகுகளும். இதனாற்றான் மெத்திரிக் அலகு முறை உலக நாடுகளில் புழக்கத்திற்கு வந்துள்ளன. ஆனால் பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் இம்முறை புழக்கத்திற்கு வரவில்லை. இதற்குக் காரணம் அவற்றின் ஆதிபத்திய செருக்கென்றே கருதப்படுகின்றது. கனடாவோ இவற்றுடன் கொண்டுள்ள அதீத வர்த்தகத் தொடர்பினால் மெத்திரிக் முறை உத்தியோக ரீதியில் புழக்கத்தில் இருந்தும் வர்த்தகத் துறையில் மெத்திரிக் முறையும், பிரித்தானிய முறையும் பயன்படுத்தப்படுகின்றன. விஞ்ஞான தொழில்நுட்ப உலகில் மெத்திரிக் முறையே உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையன்

கனடாப் பாடசாலைகளில் பிரித்தானிய முறை அலகுகளுக்கான அட்டவணைகளோ அல்லது இவ்வலகுகளைக் கொண்ட எதுவித கணிப்புகளோ கற்பிக்கப்படுவதில்லை. ஆனால் ஒப்பீட்டளவில் இம்முறைகளின் அலகு மாற்றங்கள் கற்பிக்கப்படுவது கணித

24ம் பக்கம் வருக

# அன்னை திரேசா அன்புச் சேவையின் சின்னம்

## Mother Teressa
## A symbol of Love & Service

கனகேஸ்வரி நடராஜா
Teacher
Earl Haig Secondary School

அண்மையில் நான் கோடை விடுமுறைக்கு கொழும்பு சென்றிருந்த சமயம் இலங்கையைத் தளமாக வைத்து அன்னை திரேசா பற்றிய ஒரு படம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. எனது வீட்டிற்கு அண்மையில் மகில சமித்தியினால் நடத்தப்படும் ஒரு அனாதைப் பிள்ளைகளின் இல்லம் உண்டு. அத்துடன் அதற்கு அண்மையில் சில சேரிகளும் உண்டு. இதனால் இவ்வாழ்வு அன்னையின் சேவைகளைப் பிரதிபலிக்கும் ஒரு இடமாகத் தெரிவு செய்தனர். இன்று கொழும்பில் எல்லாப் பக்கங்களிலும் வீதிகளைப் பெருப்பிப்பதும், புது வீதிகளை நிர்மாணிப்பதுமாக எங்கும் தொழிலாளர்கள் இரவு பகலாக வேலை செய்தபடி இருக்கிறார்கள். ஆயினும் இவற்றிற்கெல்லாம் ஈடு கொடுக்க முடியாத அளவுக்கு வாகனங்களை மக்கள் வாங்கிக் குவித்தபடி இருக்கிறார்கள். இவற்றிற்கு எல்லாம் மேலாகப் பார்த்த இடமெல்லாம் கரப்பொத்தான் பூச்சிகள் போல ஓட்டோ ரிக்ஷாக்கள் ஓடியபடி இருக்கின்றன. இத்தகைய வாகன நெரிசலின் மத்தியில் எனது வீட்டு ஒழுங்கையில் கிட்டத்தட்ட 10 பாரிய டிரக் வண்டிகள் பல நாட்களாக முகாம் போட்டு அன்னை திரேசாவின் படத்தை தயாரித்தபடி இருந்தனர்.

ஏற்கனவே ஆறு வருடங்களுக்கு முன்பு Film location services limited அன்னை திரேசா பற்றிய ஒரு விவரணப் படத்தை தயாரித்துள்ளனர். இப்பொழுது தயாராகிக் கொண்டிருக்கும் புதுப்படத்தை இந் நிறுவனமும், ஒரு இத்தாலிய பட நிறுவனமும் கூட்டாக இணைந்து தயாரிக்கிறார்கள். இதன் தலைவராக சந்திரன் ரட்ணம் என்பவர் விளங்குகின்றார். கொழும்பின் பல பாகங்கள் இப் படப்பிடிப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ராஜகிரிய ஆயுர்வேத ஆஸ்பத்திரி, கோட்டைப் புகையிரத நிலையம், விக்டோரியா பூங்கா என்பன சில இடங்களாகும். ஸ்பெயின், இத்தாலி, இந்தியா, இங்கிலாந்து, அத்துடன் இலங்கையைச் சேர்ந்த பல நடிகர்களும் இதில் நடிக்கிறார்கள். அன்னை திரேசா தனது சேவைகளை கல்கத்தாவில் ஆற்றிய பொழுது பல இடையூறுகளை சந்திக்க வேண்டி இருந்தது. அத்துடன் பொலிஸாரின் கெடுபிடிகளுக்கும் இவர் ஈடுகொடுக்க வேண்டியிருந்தது. பொலிஸ் கமிஷனரின் பாகத்தை ஒரு இலங்கையரான ரவீந்திரா ரன்டெனியா என்பவரே நடிக்கின்றார். அன்னை திரேசாவின் மரணத்தின் பின்பு சகோதரி நிர்மலாவே அன்னை வகித்த பொறுப்புகளை ஏற்றார். சகோதரி நிர்மலாவின் பாகத்தை இலங்கை நடிகை நிம்மி ஹரஸ்கம ஏற்றுள்ளார். இன்று கொழும்பில் பெரிய சேரிகளைக் காண்பது அரிது. அதனால் கல்கத்தா போல் காட்சி அளிப்பதற்காக ஏற்கனவே இங்குள்ள சேரிகளை பெரிதாக்கியுள்ளனர். அன்னை திரேசா நோபல் பரிசு பெறுவதற்காக ஒஸ்லோ சென்ற வைபவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கையிலேயே ஒரு ஒஸ்லோ நகர மாதிரியை அமைப்பதாக உள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் சிறு பாகங்கள் ஏற்று நடிக்கும் வாய்ப்பினையும் பெறுகின்றனர். இப்படத்தின் தயாரிப்பாளர்கள் "இலங்கை இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு திரைப்படத்தலம்" என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளனர். (Sri Lanka is God made film set). மொத்தத்தில் அன்னை திரேசா பற்றிய விவரணப்படம் இலங்கையின் அந்தஸ்தை உலக அரங்கில் உயர்த்தும் என ஏகோபித்த குரலில் பலரும் பாராட்டியுள்ளனர்.

அன்னை திரேசாவிற்கு ஞானி (Saint hood) அந்தஸ்து வழங்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. Saint hood இற்கு முதலான படிநிலையாகிய Beatification ரோமாபுரியில் ஒக்டோபரில் நடைபெற உள்ளது. இச் சந்தர்ப்பத்தில் அன்னையின் வாழ்க்கை பற்றி சிந்தித்தல் நலம். உலகின் எங்கோ ஒரு மூலையில் பிறந்து தனக்கு ஒருவிதத்திலும் தொடர்பு இல்லாத நாடாகிய இந்தியாவில் தொண்டு செய்ய ஒரு 18 வயது இளம் பெண் தனது வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்பது இறைவனின் ஆணையென்றே கூற வேண்டும். (Call from God). யூகோஸ்லாவியாவில் (தற்பொழுது இதனை மசிடோனியா என அழைப்பர்) ஆகஸ்ட் 26, 1910ல் அல்பேனிய இனத்தைச் சார்ந்த பெற்றோருக்கு இவர் பிறந்தார். பெற்றோர் இவருக்குச் சூட்டிய நாமம் Agnes என்பதாகும். இவரது தந்தையார் ஒரு சாதாரணக் கட்டிடத் தொழிலாளி. சொற்ப வயதிலேயே இறந்து போனார். தாயாரின் மேற்பார்வையிலேயே இக் குடும்பம் வாழ்ந்தது. ஒரு சிறந்த தாய்க்கு உரிய எல்லா லட்ணங்களையும் கொண்டவர் இவரின் தாயார். அவரின் வளர்ப்பு முறையும், இறைவழிபாடுமே அன்னை திரேசாவை கட்டுப்பாட்டுடன் இறைபக்தியும் உள்ள ஒரு யுவதியாக உருவாக்கியது. இதன் காரணமாக தனது 18வது வயதில் அயர்லாந்திலுள்ள ஒரு கன்னியாஸ்திரிகள் கட்டளையில் (Sisters of one Lady of Lorreton) இணைந்து கொண்டார். அங்கிருந்து லொறற்ரோ கன்வன்டில் ஆசிரியையாக கல்கத்தாவிற்கு சென்றார். புவியியலும், சமயமும் கற்பிக்கும் ஆசிரியையாகப் பதவி ஏற்ற இவர் பின்பு அந்தக் கல்லூரியின் அதிபராகவும் உயர்த்தப்பட்டார். ஆயினும் இவரின் மனதில் நிம்மதியே ஏற்படவில்லை. கன்வென்ட் சுவர்களுக்கு அப்பால் கல்கத்தாவின் வறுமை மிக்க மக்கள் படும் துன்பங்கள் தான் இவர் கண்களுக்குத் தெரிந்தன. சேர்ச்சின் அனுமதியுடன் இறைவனின் அழைப்பு தனக்கு வந்து விட்டதாகக் கூறி வேறு சில கன்னியாஸ்திரி சகோதரிகளையும் இணைத்து Missionaries of charity என்ற அறக்கட்டளையை ஆரம்பித்தார். மக்கள் மத்தியில் சேவை செய்வதென்றால் அவர்கள் பேசும் மொழியை கற்பது முக்கியம் என உணர்ந்து இந்தி, வங்காள மொழிகளைக் கற்றார். அத்துடன், அவர்களில் ஒருவராக வாழ மிகவும் எளிய வெள்ளை நிற சேலை - 3 நீல கோடுகளைக் கரையாகக் கொண்ட சேலையை அணிந்து கொண்டார். தானும் வறுமை மிக்க மக்களில் ஒருவராக மாறினால் தான் தனது சேவை வெற்றியளிக்கும் என்பதனை செயலில் காட்டினார்.

இவரது சேவை முதலில் சேரிக் குழந்தைகள் மத்தியில் ஆரம்பித்தது. குழந்தைகளுக்கு முதலில் தங்களைச் சுத்தமாக வைத்திருக்கும் முறைகளைப் புகட்டிய பின்பு மர நிழலில் மண்ணில் எழுதப் பழக்கினார். இதனைப் பார்த்த ஒரு முஸ்லிம் கனவான் தனது வீட்டைப் பாடசாலை ஆரம்பிக்க அளித்தார். 54A, Lower Circular Road இல் அமைந்த அந்தக் கட்டிடமே இன்றுவரை அன்னையின் சேவைகளின் தலைமை ஸ்தானமாக விளங்கி உலகப் புகழ் பெற்றுள்ளது.

மரணவீடு என்பது மரியாதையுடன் பிறரால் நடத்தப்பட வேண்டிய ஒன்று. கல்கத்தாவின் ஏழை மக்கள் வீதிகளில் நாய்கள் போல் இறந்து கிடப்பதுண்டு. அவர்களை எடுத்துச் சென்று மரியாதையாக அவர்களின் சமய முறைப்படி மரணச் சடங்குகளை அன்னை செய்வித்தார். இது மாத்திரமன்றி சேரிக் குழந்தைகளை பெற்ற உடனேயே குப்பையில் வறுமை காரணமாகப் போடும் நிலை காணப்பட்டது. அக் குழந்தைகளை எடுத்து இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா ஆகிய இடங்களில் தத்து எடுத்து வளர்க்க

மறுபக்கம் வருக

### கவிஞர் கந்தவனம் தரும்

# கனடிய காட்சிகள்

## பயங்கரக் கற்பனை

'என்ன வரவரப் பயங்கரவாதியாக மாறிக் கொண்டு வாறியள்!'

'ஓய்! மெல்லப் பேசும்! நான் பயங்கரவாதியா? கோடு கீடு தானும் ஏறியறியாத என்னைப் பயங்கரவாதி என்று நாக் கூசாமல் சொல்லுறீரே!'

'இப்ப பத்திரிகைகள் என்ன, ரீவியள் என்ன எல்லாமே பயங்கரப் புதினங்களை அடிக்கடி சொல்லி வருவதால் அந்த நாகரிகத்தில் மூழ்கிப் போய்ச் சொல்லிப் போட்டன். என்றாலும் நீங்கள் அன்றைக்குப் பேசும் பொழுது கைதட்டாதவருக்கு ஆதரைட்டீஸ் வருத்தம் வரும் என்று பயமுறுத்தினனீங்கள் தானே!'

'நீ என்னப்பா, பகடிக்குப் பயங்கரவாத முத்திரை குத்துறாய்! பேச்சிலே இரண்டு வகையுண்டு. ஒன்று சிவபெருமான் பாணி; மற்றையது சனிபகவான் வகை. சிவபெருமான் மாதிரித் தயவு தாட்சண்யமாகப் பேசினால் ஆட்கள் நன்றாகக் கேட்பினம்; ஆனால் பொருட்படுத்த மாட்டார்கள். சனிபகவான் பாணி ஒரு வெருட்டற் பாணி. கொஞ்சம் அச்சுறுத்தினால் கேட்பதோடன்றிக் கடைப்பிடிக்கவும் செய்வார்கள். இது மனிதகுல இயல்பு. இதனாலேயே வேதாகமங்களை விளக்க எழுதப்பெற்ற புராணங்களிற் பயமுறுத்தற் கதைகள் புகுத்தப்பட்டன. இது எதிர் விளைவுகளை உண்டு பண்ணியிருப்பதுவும் உண்மை. எதிர்விளைவு என்பது சிவபெருமானைக் கைவிட்டுச் சனீஸ்வரரின் காலைப் பிடிக்க வைத்த விளைவு.

சிவராத்திரி விரதம் பிடிக்காதவர்களும் சனி விரதம் பிடிக்கிறார்கள். சாதாரணமாக வெள்ளிக்கிழமைகளிலாயினும் கோயில்களுக்குப் போகாதவர்கள் எல்லாம் புரட்டாதிச் சனி என்றால் புனிதக் கோலம் பூண்டு பிள்ளை குட்டிகளுடன் கோயில்களுக்குச் செல்கிறார்கள் எள் எண்ணெய் எரிக்க. பத்தியிலும் பயந்தான் இங்கே பலருக்கு வேலை செய்கின்றது. சுருக்கமாகச் சொன்னால் சிங்களவருக்குப் புலி போலத் தமிழருக்குச் சனி.'

'சனி பகவானுக்கு ஏன் அப்பிடிப் பயப்பட வேண்டும்!'

'அதுதான் சொன்னேனே! பயப்பட வைத்திருக்கிறார்கள் முன்னோர்கள். ஒன்றல்ல இரண்டல்ல எத்தனையோ பயமுறுத்தற் கதைகள் உள்ளன. முக்கியமான ஒரு கதை மகாபாரதத்தில் வருகிறது.

'சூதினாலே நாட்டையும் நல்வாழ்வையும் இழந்து சோர்வுற்றிருந்த தருமரைத் தேற்றும் வகையில் வேதவியாசர் ஒரு கதை சொல்கிறார். அதற்கு நளமகாராசன் கதை என்று பெயர். கலியாகிய சனியின் தொல்லையால் நளன் சூதாடி நாடிழந்து காட்டில் அலைந்து பின்னர் சனிபுத்தி முடிவுறும் காலத்தில் நல்வாழ்வு பெறுகின்றான்.

இந்தக் கதையை ஹர்ஷகவி என்பார் வடமொழியில் 'நைஷதம்' என்ற பெயரில் காவியமாக்கினார். இதனைப் புகழேந்திப் புலவர் தமிழிற் பாடினார். வெண்பா யாப்பினாலே கதை சொல்லப்பட்டதால் இது 'நளவெண்பா' எனப்பட்டது.

'இது நளன் கதை. என்னுடைய கதையையும் கேளும். எனக்கு ஏழரை நடந்து முடியும் கட்டத்தில் பிரபல சோதிடர் க.வை.கணேசமூர்த்தியுடன் உரையாட நேர்ந்தது. அப்பொழுது அவரை ஒரு கேள்வி கேட்டேன்.
'ஏழரைச் சனியென்றால் ஏதோ ஏதோ எல்லாம் கஷ்டங்கள் வரும் என் சொல்லுவார்கள். எனக்கொன்றும் அப்படி வரவில்லையே? என்பது கேள்வி. நல்லவர்களைச் சனி அணுகாது என்று அவர் சொன்ன போது நான் எனக்குள்ளே பூரித்து மதாளித்தேன்.'

'தருமரும் நளனும் நல்லவர்கள் தானே?'

'நல்ல கேள்வி. தருமரும் நளனும் கலி பிடித்ததால் சூதாடினார்களா அல்லது சூதாடியதால் அவர்களைக்கலி பிடித்ததா? என்ற ஆய்வு இன்னமும் தொடர்கிறது. சூதாடிய காரணத்தாலேயே அவர்களுக்குக் கஷ்டம் வந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்ததொன்று. கஷ்டத்துக்கு மற்றொரு பெயர் தான் சனி. ஆனால் நல்லவர். தீயன செய்ய மாட்டார் என்ற கோட்பாட்டை நிலைநாட்ட சனி பிடித்ததாலேயே அவர்கள் சூதாடினார்கள் என்று பழியைச் சனீஸ்வரரிற் சுமத்தி விட்டார்கள். நல்ல கற்பனை. பாடத்தைப் பயமுறுத்தியேனும் படிப்பிக்க முயன்ற கற்பனை. கற்பனையை இரசிப்போம்!

## அன்னை திரேசா

வழி செய்தார். குஷ்டரோகம் இந்தியாவில் முன்பு பாரிய அளவில் காணப்பட்டது. இத்தகைய குஷ்டரோகிகள் தெருவால் செல்லும் பொழுது ஒரு மணியை அடித்து தம்மை நெருங்க வேண்டாம் என எச்சரித்தபடி செல்வார்கள். அவர்களுக்கெல்லாம் அன்னை வைத்திய வசதிகளை வழங்கினார். அன்னையின் சேவைகளை மெச்சி 1979ல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்பணத்தை இவரின் சேவைகளுக்காகவே செலவு செய்தார். பிரதமர் இந்திரா காந்தி தனது ஆட்சிக் காலத்தில் அன்னை உலகின் எப்பாகங்களுக்கு Air India மூலம் இலவசமாகச் செல்லும் சலுகையை வழங்கினார். இன்று அன்னையின் சேவையை மேற்கொள்ளும் கிளைகள் 105 நாடுகளில் காணப்படுகின்றன. 4000 தாதிகள், 400 பாதிரிமார், ஆயிரமாயிரம் தொண்டர்கள் இவரது சேவையை 569 கிளைகள் மூலம் உலகம் முழுவதும் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

அன்னையின் வாழ்க்கை வரலாற்றை E.S.L மாணவர்களுக்குக் கற்பிக்கும் பொழுது அவர்கள் பின்தங்கிய நாடுகளில் இருந்தே புலம்பெயர்ந்தவர்கள் என்பதால் மிகவும் ஆர்வமாகக் கற்பார்கள். எனது வகுப்பு மாணவர்கள் அன்னையின் சேவையை மெச்சி, நன்றி கூறி ஒரு கடிதத்தை ஒரு முறை அவருக்கு எழுதினார்கள். உடனேயே அன்னையிடமிருந்து அவர்களுக்குப் பதில் வந்தது. அன்னையின் எளிமையை அக் கடிதம் எடுத்துக் காட்டியது. அக் கடிதம் பின்வருமாறு

**MISSIONARIES OF CHARITY**
*54/A, A. J. C. Bose Road,*
*Calcutta - 700016. India.*

+LDM

20th Feb. 1993

Dear Mrs. Nadarajah, Abeba, Quyen, Fatima, Bronia, Rahat, Ponnudurai

Thank you very much for your letter.

God loves each one of you in a very special way and has given you joy in order to share with each other especially the poor one.

You, too, can do to Jesus little acts of love in the poor, lonely, neglected ones of your own city. God loves you so much and asks that you share this love with all those around you. Be a sunshine of His love to your parents, friends and neighbours.

Learn to pray beautifully.

God Bless you

M. Teresa mc

அன்னையின் Beatification (அதாவது Sainthood க்கு முதற்படியான நிலை) ஒக்டோபர் 19ம் திகதி ரோமில் நடைபெற உள்ளது. அன்னையின் எளிய தோற்றம் கொண்ட முத்திரைகள் பொறிக்கப்படவுள்ளன. சேவை செய்வதற்கு எமது தாயகத்தில் மாத்திரமன்றி, இந் நாட்டிலும் பல வாய்ப்புகள் உண்டு. எம்மால் இயன்ற சேவையை செய்தல் இன்றியமையாதது. அன்னையின் வாழ்க்கை எமக்கு ஒரு உதாரணமாக அமையட்டும். "மக்கள் சேவையே மகேசன் சேவை"

# கனடியத் தமிழரின் பெறுமதியான ஒரு முயற்சி
## யாழ் நூல் - மீள்பிரசுர வெளியீடு







எப்போதாவது சில நல்ல பயனுள்ள முயற்சிகள் இடம்பெறுவதுண்டு. இதனை 'அரிய' என்று மதிப்போடு அழைப்பர். இவ்வாறான ஓர் அரிய முயற்சி கடந்த மாதம் கனடாவில் நிகழ்ந்தேறியது. விபுலாநந்த அடிகளாரின் 'யாழ் நூல்' மறுபிர வெளியீட்டினையே இங்கு குறிப்பிடுகின்றேன்.

சுவாமி விபுலாநந்தரை அழைக்கையில் 'யாழ் நூல்' தந்த விபுலானந்தர் என்றழைப்பது தனி மரபு. அவ்வாறான அரும் பெரும் பொக்கிஷமாகத் திகழும் யாழ் நூலின் பிரதி ஒன்றிரண்டைத் தவிர வேறு எங்குமிருக்கவில்லை. அதனால் அதனை மீளப்பதிப்பிக்க வேண்டியது காலத்தின் தேவையாக இருந்தது.

எல்லோருக்கும் நன்கு தெரிந்த திரு. தாம் சிவதாசன் ('வீடு' மாதப் பத்திரிகையின் பதிப்பாளர்) அவர்கள் தமது மறுமொழி ஊடக வலையாக்கத்தின் கன்னிப் பிரசவமாக யாழ் நூலை வெளிக்கொணர்ந்து அனைவரதும் பாராட்டைப் பெற்றதுடன், விபுலாநந்த அடிகளின் கனவை நனவாக்கியுமுள்ளார். இதற்காக, தமிழுலகு அவருக்கு நன்றி தெரிவிக்கும் கடப்பாடுடையது.

ரொறன்ரோவில் புதிதாக உருவாக்கப்பட்ட 'ஒல்கார்' அமைப்பு இதன் வெளியீட்டு விழாவினைக் கடந்த மாதம் 4ம் திகதி ஸ்காபரோ நகராட்சி மன்ற அரங்கினில் அடக்கமான வைபவமாக நடத்தியது. திரு தாம் சிவதாசனே இதன் நெறியாளராகப் பணியாற்றினார். கலை தொழில் நுட்பக் கல்லூரி இயக்குனர் திரு. சு. இராஜரத்தினம் வாழ்த்துரை வழங்கினார். வித்துவான்கள் செபரத்தனம், ஞானரத்தினம் ஆகியோரின் சிற்றுரைகளுடன் கலாநிதி நா. சுப்பிரமணியத்தின் ஆய்வுரையும் இடம்பெற்றது. இலக்கியத் திறனாய்வாளர் பொன்னையா விவேகானந்தன், கவிஞர் உருத்திரமூர்த்தி சேரன் ஆகியோர் தத்தம் பார்வையில் விமர்சனங்களை நிகழ்த்தினர். 'தமிழர் தகவல்' பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் 'புகலிடத் தமிழர் வெளியீட்டு முயற்சிகள்' பற்றிய சிறப்புரை நிகழ்த்தினார்.

மயில்வாகனன் என்னும் பெயர்கொண்ட சுவாமி விபுலாநந்தர் 1892ம் ஆண்டில் பிறந்து ஐம்பத்தைந்து வருடங்கள் வாழ்ந்தவர். பதினான்கு ஆண்டுகள் இவர் மேற்கொண்ட இசையாராய்ச்சியின் பயனாக 'யாழ் நூல்' பிறந்தது. 1947 ஜுன் மாதம் 5-6ம் திகதிகளில், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோவிலில், ஏளுடைய பிள்ளையார் தெய்வத்திரு முன்னிலையில் இத்த இசைத் தமிழ் நூலின் அரங்கேற்ற விழா பெருவிழாவாக நடைபெற்றது. இதன் இரண்டாம் பதிப்பு 1974ல் வெளிவந்ததாயினும், இதன் பிரதிகளை எங்கும் எடுக்க முடியாதிருந்தது.

விபுலாநந்தரின் நூற்றாண்டு விழாவினையடுத்து அவரது பணிகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுப் பல இடங்களில் விழாக்களும், மலர் வெளியீடுகளும், கண்காட்சிகளும் நடத்தப்பட்டன. இதனையொட்டிய மலர்களில் அரைத்த மாவை அரைக்கும் பாணியில் பல கட்டுரைகள் இடம்பெற்றனவேயன்றி, அடிகளாரின் யாழ்நூலை மீள்பதிப்புச் செய்யும் சிந்தனை எவருக்கும் உதிக்கவில்லை.

இந்த வகையில் இதனை இப்போது மீள்பதிப்புச் செய்த திரு. தாம் சிவதாசனும், இதனை வெளியிட்டு வைத்த 'ஒல்கார்' அமைப்பு நிர்வாகிகளும் சமூகத்தின் நன்மதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

- றதி

## றொறன்ரோ பியர்சன் விமான நிலையத்திற்கு சுகமான பஸ் பிரயாணம்!

ஆச்சரியமாக இருக்கிறதா? லோறன்ஸ் வெஸ்ற், எக்லிங்ரன் வெஸ்ற, கிப்லிங் ஆகிய புகையிரத நிலையங்களிலிருந்தும், வோர்டன் & டன்போர்த் இலிருந்தும் வாரத்தில் ஏழு நாட்களும் பியர்சன் இன்ரர்நாஷனல் விமான நிலையத்தின் டேர்மினல் 2, 3 இற்கு பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன. பனிக் காலங்களில் மிகப் பயனுள்ளதாக இவை அமையும். லோறன்ஸ் வெஸ்ற் - முழுநாள் சேவையாக காலை 5:00 மணியிலிருந்து அடுத்தநாட்காலை 2:00 மணிவரை இடம்பெறும் இச்சேவை ஏறத்தாழ 45 நிமிடங்கள் ஒருவழிப் பயண நேரமுடையதாகும். பஸ் இலக்கம் 58A Malton. எக்லிங்ரன் வெஸ்ற் - முழு இரவுச் சேவையாக பின்னிரவு 1:30 மணியிலிருந்து அதிகாலை 4:30 மணிவரை இடம்பெறும் இச்சேவையும் ஒரு வழிப் பயண நேரமாக 45 நிமிடங்களைக் கொண்டது. பஸ் இலக்கம் 307. கிப்லிங் - துரிதகதி முழுநாள் சேவையாக காலை 5:30 மணியிலிருந்து அடுத்த நாட்காலை 2:00 மணிவரை இடம்பெறும் இச்சேவையின் ஒருவழிப் பயண நேரம் 20 நிமிடங்களாகும். பஸ் இலக்கம் 192 Airport Rocket. வோர்டன் & டன்போர்த் - முழு இரவுச் சேவையாக பின்னிரவு 2:30 மணியிலிருந்து அதிகாலை 5:00 மணிவரை இடம்பெறும் இச்சேவையும் ஒரு வழிப் பயண நேரமாக 45 நிமிடங்களைக் கொண்டது. பஸ் இலக்கம் 300A Bloor-Danforth.

# ஒரு பகிரங்கக் கடிதம்
# பாபரா ஹோலிடமிருந்து டால்ரன் மக்கன்ரிக்கு

**தமிழாக்கம்**
**கே. ஜவஹர்லால் நேரு**

பட்சமுள்ள திரு. மக்கன்ரி அவர்களுக்கு,

ரொறன்ரோ வாழ் மக்களுடன் ஒன்று சேர்ந்து உங்களுடைய மகத்தான தேர்தல் வெற்றிக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுகாதாரச் சேவையையும், கல்விச் சேவையையும் சீரமைக்க வேண்டும். அவற்றைச் செய்வதற்கு அரசாளும் முறைகள் மாற்றப்பட வேண்டும். அவற்றில் நம்பிக்கை வேண்டும். புதிய அரசியல் தலைமைத்துவம் வேண்டும். அதனால், அவற்றைச் செய்து முடிப்பதற்கு எமக்கொரு சந்தர்ப்பம் தாருங்கள் என மக்களைக் கேட்டீர்கள். அவர்களும் அதனை உங்களுக்கு வழங்கியுள்ளனர். நீங்கள் குறிப்பிட்ட பிரச்சனைகள் எங்கள் யாவரையும் பாதிக்கும் விடயங்களாகும்.

நான் ரொறன்ரோ மேயராகத் தெரிவு செய்யப்பட்டால், பல ஆண்டுகளாக ரொறன்ரோ மாநகரம் மாகாண அரசாங்கத்தாலும் மத்திய அரசாங்கத்தாலும் புறக்கணிக்கப்பட்டு வந்ததை மாற்றியமைத்து ஒற்றுமையுடன் செயலாற்ற முடியும் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். கனடிய நகரங்களில் மிகப் பெரியதும், ஒன்ராறியோ மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துகோலாக விளங்கும் ரொறன்ரோவின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உங்களுடன் ஒன்றிணைந்து செயலாற்றும் நல்ல நாளை நான் எதிர்பார்க்கிறேன்.

கடந்த ஆறாண்டு கால மெல் லாஸ்மனின் நிர்வாகத்தின் போது அந்த நிர்வாகத்திற்கும் மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்களுக்குமிடையே நிலவ வேண்டிய நல்லெண்ணம் எங்கோ மாயமாக மறைந்து போயிற்று. அதனால், மாகாண அரசாங்கத்திடமிருந்தும், மத்திய அரசாங்கத்திடமிருந்தும் கிடைத்து வந்த மானியங்கள் குறைந்தன. மாநகரசபைகள் இணைக்கப்பட்டதால் எந்தவித நன்மைகளும் ஏற்படவில்லை. மிகப்பெரிய பணச் செலவு மாத்திரமே ஏற்பட்டது. அத்துடன் மாகாண அரசாங்கத்தாலும் மத்திய அரசாங்கத்தாலும் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த சேவைகள் பல ரொறன்ரோவின் தலையில் சுமத்தப்பட்டன.

இவற்றினால் ரொறன்ரோ மாநகரத்தின் கட்டமைப்பிற்கும் பொதுச் சேவைகளுக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டதுமல்லாமல், மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. அறவிடும் வரிகளைக் கொண்டு சேவைகளை நடத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளதால் மாநகர-சபைக்கே ஆபத்து உண்டாகியுள்ளது.

சமீபத்தில் பல வர்த்தக, கலை, கலாசார, சமூக சேவைத் தலைவர்கள் ஒன்றுபட்டு ரொறன்ரோவிற்கு உதவி வழங்கும் விடயத்தில் புதிய அணுகுமுறைகள் கையாளப்பட வேண்டும் என அறிவித்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்த விடயத்தை முன்னெடுத்த அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

பொதுப் போக்குவரத்துச் சேவைக்கு நீண்டகால, நிரந்தர நிதியுதவி வழங்கப்பட வேண்டும் என்பது சகல மக்களின் அபிப்பிராயமும் எதிர்பார்ப்புகளுமாகும். ஒவ்வொரு வருடமும் ரொறன்ரோவில் இருந்து 7 பில்லியன் டாலர்கள் மாகாண அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் கிடைக்கின்றன. இந்தத் தொகையின் விகிதத்தைக் கணக்கிட்டால்,

**ரொறன்ரோ நகர மேயர் போட்டியிலிருக்கும் ஒரேயொரு பெண்மணியான பாபரா ஹோல் அவர்கள் ஒன்ராறியோ மாகாண புதிய முதல்வர் டால்ரன் மக்கன்ரிக்கு எழுதிய கடிதம் இது.**

மாநகரசபை எல்லைக்குள் வசிக்கின்ற ஒவ்வொரு ஆண், பெண் குழந்தைகயிடமிருந்தும் 3,000 டாலர்கள் குவீன்ஸ் பார்க்கிற்கும் ஒட்டாவாவிற்கும் போய்ச் சேருகின்றது. எமக்கு அந்தத் தொகையில் இருந்து ஒரு சிறிய பங்காவது கிடைக்க வேண்டும்.

நாம் எல்லோரும் கனடியர்கள். பிராந்திய அபிவிருத்தியை ஆதரிப்பவர்கள். அவைக்கு எமது பங்களிப்பும் தேவை என்பதை ஏற்றுக் கொள்கிறோம். அதே நேரம் ஏனையவற்றைப் போல ரொறன்ரோவும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒரு பிராந்தியம் என்பதையும், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

நவம்பர் 10ம் திகதி ரொறன்ரோ மக்கள் ஒரு புதிய மேயரைத் தெரிவு செய்வார்கள். அதற்குச் சில நாட்களுக்குப் பின்னர் ஒரு புதிய பிரதம மந்திரி பதவியேற்கவுள்ளார். இறுக்கமான உறவுகளை ஏற்படுத்துவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இப்படியான சந்தர்ப்பம் முன் ஒரு போதும் ஏற்பட்டது கிடையாது. அதனால் இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் உங்களுடன் ஒன்றுபட்டு உழைக்கும் சந்தர்ப்பத்திற்காக நான் காத்திருக்கின்றேன்.

### நாம் எங்கே தொடங்கலாம்?

ரொறன்ரோவிற்கு தற்போது மிக மிக அவசியமாகத் தேவைப்படும் வாடகை குறைந்த வதிவிடங்கள் மனதிற்கு வருகின்றது. அவைகளை நிர்மாணிப்பதற்கும் பாலர் பராமரிப்பு நிலையங்களுக்கும் ஆவன செய்யப்படுமென மத்திய அரசாங்கமும் அறிவித்துள்ளது. ரொறன்ரோவின் துறைமுகப் பகுதி அபிவிருத்தி இன்னொரு உதாரணம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மாநகர, மாகாண, மற்றும் மத்திய அரசாங்கங்கள் இதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தன. ஆனால் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாகவில்லை. எமது ஒத்துழைப்பால் இந்த மூன்று விடயங்களையும் நிறைவேற்ற முடியும்.

எமக்கு முக்கியமாகத் தேவைப்படுவது புதிய தலைமைத்துவம், புதிய நட்புறவு, புதிய பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை, அதற்கு முதற்கட்ட நடவடிக்கையாக மாநகரசபை நிர்வாகம் சீரமைக்கப்பட வேண்டும். முதலில் எமது வீட்டில் உள்ள குறைகள் நீக்கப்பட வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக மாநகரசபையின் தலைமைத்துவம் ஒரு சூனியப் பிரதேசமாகக் காட்சியளித்து வருகின்றது. நிதி விவகாரங்களில் கணக்கிட்டுச் சொல்ல முடியாத அளவில் குளறுபடிகள். திரைக்குப் பின்னால் கொடுக்கல் வாங்கல். நெருங்கியவர்களுக்குச் சலுகைகள் போன்ற விடயங்களே நடைபெற்று வந்துள்ளன. எனது வழிநடத்தலில் மாநகரசபையில் இருந்து வரும் சகல குறைபாடுகளும் நீக்கப்பட்டு, செயற்பாடுகள் யாவும் பகிரங்கமாக நடத்தப்பட்டு, சிறந்த முறையில் நிர்வாகிக்கப்படும் என உறுதியளிக்கின்றேன். மாநகரசபை நிர்வாகத்தில் கண்ணியமின்மை, ஒழிப்பு மறைப்பு, நிர்வாகக்குறைவு ஆகியவை இருக்கும் பொழுது மாகாண அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் அவர்களை நம்பி கூடுதலான நிதி ஒதுக்கீடுகள் செய்வார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பரஸ்பர நம்பிக்கையும், கூட்டுறவும் எத்தகைய அனுகூலங்களைத் தந்தன என்பதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம். பல ஆண்டுகளாக மாநகரசபை உறுப்பினராகவும், 1990ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் 31ம் பக்கம் வருக

# கோலாலம்பூரில் நடைபெற்ற ஒன்பதாவது உலக சைவ மகாநாடு

ஒரு வாரம் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் தமிழ் மக்களிடையே சைவ உணர்வும் எழுச்சியும் மேலோங்கிக் காணப்பட்டது. ஒரு குதூகலமான மக்கள் விழாவொன்றில் கலந்து கொள்கின்ற உணர்வு எங்கள் எல்லோரிடமும் காணப்பட்டது.

இன்று ஈழத் தமிழர்களால் எமது பாரம்பரிய களஞ்சியமாகிய தமிழும் சைவமும் உலகெங்கும் மாறிவருவதுடன் சைவ மதத்திற்கு பெருவிழாக்களும் மாநாடுகளும் நடத்தப்பட்டு வருவதாக 9வது உலக சைவமாநாட்டில் உரையாற்றிய தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் எடுத்துக் கூறினார். எனினும் எமது சமயம் இன்று வலுவிழந்து குற்றுயிரோடு தான் வாழ்கிறது என்று உலக சைவப் பேரவையின் முதல்வராக இருந்து சிவப்பேறடைந்த தவத்திரு சிவநந்தி அடிகளார் கவலை கொண்டிருந்தார்.



கடந்த 4 வருடங்களில் உலக சைவப் பேரவையின் மூன்று உலக சைவ மாநாடுகளில் பங்குபற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது இறைவனின் அருளாகும். 1999ம் ஆண்டு கனடாவிலும் 2001ம் ஆண்டு மொரிஷியசிலும் இந்த ஆண்டு செப்டம்பர் 26, 27, 28ம் திகதிகளில் கோலாலம்பூர் மலேசியாவிலும் சைவ மாநாடுகள் சிறப்பாக நடைபெற்றன.

மலேசியா மாநாட்டில் கனடாவிலிருந்து எண்மர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:- கவிஞர் வி. கந்தவனம், திரு.தி.சிவயோகபதி, திரு ச.மு.சிவநேசன், திரு.திருமதி வே.கணேஸ்வரன், திரு.க.ஜெகதீஸ்வரன், நானும் எனது பாரியாரும்.



கோலாலம்பூர் விமான நிலையத்தில் எம்மை வரவேற்பதற்கு மலேசியப் பிரமுகர்கள் வந்திருந்தார்கள். நாங்கள் சென்றிறங்கியதும் எங்களைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பலர் வந்தடைந்தனர். இலங்கையிலிருந்து 50 இற்கும் மேற்பட்டவர்களும், தமிழ் நாட்டிலிருந்து ஏறத்தாழ எழுபது பேர் (70) சிவனடியார்களும் வந்திருந்தார்கள். மேலும் தென்ஆபிரிக்காவிலிருந்து 25 பேராளர்களும் இங்கிலாந்திலிருந்து ஏழு பேரும், பிரான்ஸ், மொரிஷியஸ், சிங்கப்பூரிலிருந்து ஒரு சிலரும் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். மலேசியாவிலிருந்து பெருமளவில் சைவப்பெருமக்கள் மண்டபம் நிறைந்த தொகையினராகக் கலந்து கொண்டார்கள்.

நகரில் தங்குவதற்கு வெளிநாட்டவர்களுக்கு ஒரு பெரிய ஓட்டல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எமக்கு கோவிலுக்கு போவதற்கு, கோவில் மண்டபத்தில் உணவுக்குச் செல்வதற்கும், மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கும் சுற்றுலாவுக்கும் அழைத்துச் செல்வதற்கும் இரு பெரிய பஸ் வண்டிகளை ஒழுங்கு செய்திருந்தார்கள்.

மாநாட்டிற்கு முதல் நாள் மதிய, இரவு போசனங்கள் இலங்கைத் தமிழர்களின் கலாமண்டபத்தில் எமக்கு வழங்கப்பட்டன. இந்த மண்டபத்தையடுத்து அமைந்துள்ள ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மிகவும் அழகாகவும் சிற்பக் கலைகள் நிறைந்த பக்திப் பரவசமூட்டும் ஆலயமாகக் காணப்பட்டது.

9வது உலக சைவ மாநாட்டின் திறப்புவிழா 26ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சிலாங்கூர் சீனர் சமூக மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த வைபவத்தின் ஆரம்பத்தில் மாநாட்டிற்கு வருகை தந்திருந்த ஆதீன சுவாமிகள் அனைவரும் முறைப்படி மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். இதில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள், தருமையாதீனம் முனைவர் ஸ்ரீமத் குமாரத் தம்பிரான் சுவாமிகள், சிவச்சாரியார் யோகி இராமையா, தவத்திரு குமரகுருபர சுவாமிகள், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சுவாமி தந்திரதேவா, சிவயோகானந்த அடிகளார், சுவாமி விக்ஞானந்த, சுவாமி பிரபாக்காநந்த சரஸ்வதி மற்றும் சிலரும் அடங்குவர்.

திறப்பு விழாவில் பண்ணிசை, நடனங்கள், உலக சைவப் பேரவைக் கிளைகளின் தலைவர்களின் உரைகள், மாநாட்டு ஏற்பாட்டுக் குழுத் தலைவர் திரு.திருவாசகம் மற்றும் சிறப்பு விருந்தினரான மலேசிய அமைச்சர் மாண்பு மிகு டத்தோ ஸ்ரீ ச.சாமிவேலு மற்றும் இலங்கை இந்து சமயம் மற்றும் கலாசார நடவடிக்கை அமைச்சர் திரு மகேஸ்வரன், இலங்கை மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களின் உரையும் இடம்பெற்றன. இதைத் தொடர்ந்து சாந்தலிங்க இராமசாமி அடிகளின் சிறப்புரையும் ஏனைய சுவாமிகளின் உரைகளும் இடம்பெற்றன. இதன் பின்பு கொடியேற்றும் வைபவம் மண்டபத்தில் நடைபெற்றது. அடுத்த இரு நாட்களும் ஆய்வரங்க நிகழ்ச்சிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இரு

21ம் பக்கம் வருக

எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column) அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.

# இது எப்பிடி இருக்கு?

நடன அரங்கேற்றமொன்றுக்குச் சென்றிருந்தேன். சரியாக ஆறு மணிக்குச் சலங்கை பூசை ஆரம்பமாக வேண்டும். மார்க்கம் தியேட்டர் அரங்க வாசலில் அந்தணப் பெருமகனாரின் வரவை வழிமேல் விழிவைத்துப் பார்த்திருந்தனர் நடன மங்கையின் உறவினர்.

நேரமோ ஓடிக்கொண்டிருக்கின்றது. குருக்கள் ஐயாவைக் காணவில்லை. இறுதியில் நடன ஆசிரியர் சகுந்தலா மோகன் சலங்கை பூஜையை நிகழ்த்தி, மாணவி குரு ஆசி பெற்று எல்லாம் முடிவடையும்போது அந்தணப் பெருமகனார் ஆசுவாசாக வந்ததைக் காணமுடிந்தது. நல்லவர் அவர்; எதுவும் பேசவில்லை. மெதுவாக ஒரு ஆசனத்தில் அமர்ந்து விட்டுச் சில நிமிடங்களில் சென்று விட்டார்.

சம்பந்தப்பட்ட குருக்கள் தினசரி 'தீர்த்தம்' பருகும் பழக்கம் உள்ளவரென்றும், கொஞ்சம் 'ஓவரா'கப் பருகி விட்டால் அயர்ந்து விடுவார் என்றும் சபைக்குள் கிசுகிசுப்பு இடம்பெற்றது. இந்தச் சம்பவத்துக்குச் சில வாரங்களுக்கு முன்னர் புது வீடு புண்யாவாசகம் ஒன்றுக்கும் இவ்வாறுதான் அவர் அயர்ந்து விட்டதால் போகாமலே விட்டுவிட்டார் என்றும் மண்டப முன்வரிசையிலிருந்த சட்டத்தரணி ஒருவர் மெதுவாக என் காதில் போட்டார். ரொறன்ரோவிலிருந்து வன்கூவர், மொன்றியல் என்று பல இடங்கள் சுற்றி வந்தவரென்றால் சொல்லவா வேண்டும்.

இந்த ஒருவரின் நடத்தையால் மற்றைய அந்தணர்களைக் காப்பாற்றுவது எவ்வாறு என்பதுதான் முக்கிய கேள்வி!

அதே மார்க்கம் மண்டபத்தில் நடந்த இன்னொரு நடன அரங்கேற்றத்திலும் சமுகமளிக்க நேர்ந்தது. இங்கே சலங்கை பூஜை என்பது ஆலயத் திருவிழா அல்லது கும்பாபிஷேகம் போன்று இடம்பெற்றது. தேங்காய்கள் உடைக்கப்பட்டு, மாறிமாறித் தீபம் காட்டப்பட்டு, குரு ஆசி - பெற்றோர் ஆசிகள் என்று இடம்பெற்று, நர்த்தகிகள் மூவருக்கும்அறுகரிசி போட்டுக் காளாஞ்சி வழங்கி.....

சரியாக அரை மணிநேரம் பிடித்தது. எல்லோருமே பொறுமையிழந்து விட்டனர். மேடையில் சிதறித் தேங்கிய இளநீரை இரு சிறுமிகள் ஒத்தித் துடைத்து முடிக்க மேலும் பத்து நிமிடங்கள்.

இது சலங்கை பூஜை என்று தெரியப்படுத்தா விட்டால் இனிமேல் ஒரு மணித்தியாலம் முந்தியே பூஜையை ஆரம்பிக்க நேரிடலாம். ஒரு சிறு ஆலோசனை: சலங்கை பூஜைக்கு அந்தணருக்குப் பதிலாக நடன ஆசிரியரே நிகழ்த்தினால் என்ன? சகுந்தலா மோகனின் முன்னுதாரணத்தை மற்றவர்களும் பின்பற்றலாமே!

இந்தியாவின் 'சன் ரிவி' தொலைக்காட்சியும், 'ஜெயா' தொலைக்காட்சியும் ஒன்றுடனொன்று மோதிக்கொள்ளும் களமாக இங்கிலாந்து மாறியுள்ளதாம். ஈழத்தமிழர்களால் நடத்தப்படும் தெலைக்காட்சிச் சேவைகளை விழுங்கி ஏப்பம் விடுமளவுக்கு கவர்ச்சி காட்டும் 'தொந்தரவில்' இவர்கள் இறங்கியுள்ளனர்.

கனடாவில் இல்லையா என்று கேட்க வேண்டாம். 'சன் ரிவி தொலைக்காட்சி நிறுவனத்தினருக்கு எம்மவரின் கிரிக்கெட் நாட்டம் நன்கு தெரியும். இதனால் அதனைக் காட்டியே விளம்பரக் கவர்ச்சி.

கடந்த மாதம் எட்டாம் திகதி கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகள் ஆரம்பமாகின. தமிழ் ஊடகங்களில் வந்த விளம்பரங்களும் எட்டாம் திகதி ஆரம்பமாகும் 'டெஸ்ட்' போட்டிகளை 'சன் ரிவி' தொலைக்காட்சியில் பார்க்கலாம் என்பதுபோன்ற வார்த்தை மயக்கங்களால் விளாசியிருந்தன.

## உதாசனன் உலா விருந்து

எம்மத்தியிலிருக்கும் கல்விமான் ஒருவர் நல்ல கிரிக்கெட். ரசிகர். 'டெஸ்ட்' மாட்ச் பார்க்கும் விருப்பில் பணம் செலுத்தி இணைப்பை ஏற்படுத்திவிட்டார். எட்டாம் திகதி காலையிலிருந்து டி. வியின் முன்னால் தவம் இருப்பதுபோல இருந்தார். ஏமாற்றத்திலும் ஏமாற்றம். பொறுமையிழந்த நிலையில் சம்பந்தப்பட்ட உள்ளூர் முகவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்தபோதுதான் உண்மை தெரிய வந்தது.

"எட்டாம் திகதி டெஸ்ட் மாட்ச் ஆரம்பமாகின்றது என்றுதானே நாங்கள் விளம்பரம் செய்தோம். ''சன்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் என்றில்லையே' என்று அந்தப் புத்திமான் கல்விமானுக்கு விளக்கினார். செம்மையாகத் தாம் ஏமாற்றப்பட்டதை வெட்கம் மறந்து அவர் சொன்னபோது வேதனைக்கூடாகவும் எனக்குச் சிரிப்பு வந்தது.

இது எல்லோருக்கும் ஒரு படிப்பினையாக இருக்கட்டும். எங்கள் 'ரிவிஜ' (tvi) எமக்கென்று இருக்க, போலி விளம்பரங்களை நம்பி அவர்களிடம் ஏமாற வேண்டுமா? அவர்கள் அவர்கள்தான் என்பதை எப்போதுதான் உணருவோமோ?

கடந்த மாத முதல் வார இறுதியில் நல்ல நண்பரும் படப்பிடிப்பாளருமான நவாவிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. றொன்சஸ்டர் சிறீராஜராஜேசுவரி அம்மன் கோவிலுக்குத் தமது வீட்டாருடன் செல்வதாகவும், எங்களையும் வருமாறு அழைத்தார். அம்மாளாச்சியே நேரில் வந்து அழைப்பதுபோல இருந்தது. விடுவேனா? கைகாவலாக மனைவி கொஞ்சம் 'வெஜிடேரியன் சான்ட்விச்' செய்திருந்தார் - வழியில் பசித்தால் சாப்பிடவென. நான் எனது பங்குக்கு ஒரு சீப்பு ''ஜம்போ'' வாழைப்பழம் வாங்கினேன்.

நல்ல இதமான அதிகாலைப் பொழுது, வாகனத்துள் அமைதியான பஜனைப் பாடல்; நவாவின் பரிச்சயமான வாகன ஓட்டம். அதற்கிடையில் அமெரிக்க 'போடர்' வந்துவிட்டது. ஆங்கிலத்தில் 'Short and stocky' என்று சொல்வது போன்ற தோற்றமுள்ள பெண் அதிகாரி முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு நின்றார். மறந்தும்கூடச் சிரிக்க மாட்டார் போலும்.

அனைவரதும் கனடிய கடவுச் சீட்டுகள் கை மாறின. விரித்துப் பார்க்காமலே ஒவ்வொருவராகப் பார்த்து "நீங்கள் கனடியரா?" என்றொரு கேள்வி. வாகனத்துள் ஏதாவது சாப்பாட்டுச் சாமான்கள், பழ வகைகள் இருக்கா" என்பது அடுத்த கேள்வி.

சும்மா சம்பிரதாயக் கேள்வியென நினைத்து 'இல்லை' என்று எல்லோருக்கும் பொதுவாக நானே சொன்னேன். கதவைத் திறக்குமாறு உத்தரவிட்டார். திறந்ததும் அவரது கண்களில் பட்டது அந்த வாழைப்பழங்களே.

அதனைக் கையிலெடுத்ததுதான் தெரியும்; பத்திரகாளியானார். இது என்ன என்று உரத்துக் கேட்டார். 'வாழைப்பழம்' என்றேன். அவருக்கு மேலும் கோபம் வந்திருக்க வேண்டும். பொய் சொன்னமைக்காக சுங்க அதிகாரிகளிடம் கையளித்தால் ஐநூறு அமெரிக்க டாலர்கள் தண்டம் என்றார். சிறீராஜராஜேசுவரி அவரது இதயத்துள் புகுந்தாரோ என்னவோ கொஞ்சம் மனமிரங்கி, வாழைப்பழங்களைக் குப்பைக்குள் போடப்போவதாகச் சொன்னார்.

திருப்பித் தந்தால் அந்த இடத்தில் வைத்தே உள்ளுக்குள் தள்ளிவிட்டுச் செல்வோமே என்று கேட்கவேண்டும் போலத் தோன்றியது. நல்லவேளை அப்படிக் கேட்கவில்லை. வாழைப்பழத்தைப் பையுடன் குப்பைத் தகரத்துள் இறக்கினார். வாகனம் பயணத்தை ஆரம்பித்தது.

"பாவம் அந்தப் பெண்! சரியான பசியில் இருக்கிறார் போலும். நாங்கள் சிலதூரம் சென்றதும் அதனை எடுத்துச் சாப்பிடுவார்" என்றொரு குரல் வாகனத்துள்ளிருந்து வந்தது. சொன்னவர் அதற்கான விளக்கத்தையும் தந்தார். "வாழைப்பழத்தைக் குப்பைக்குள் வீசி எறியவில்லை. மெதுவாகப் பையுடன் சேர்த்து வைத்தாரே - கவனிக்கவில்லையா" என்று விளக்கம் வந்தது.

அந்தக் குரலுக்குரியவர் மகா புத்திசாலியாக இருக்க வேண்டும்.

# எஸ். கணேஷ்
## எழுதுகிறார்

# கனடிய பெண்களின் மதிப்பை உயர்த்திய உலகக் கிண்ணம் - 2003

இன்று உலகில் உதைபந்தாட்டத்தின் மவுசு அதிகரித்து வருகின்றது இதற்குச் சிகரம் வைக்குமாற் போல் பெண்கள் உலக கிண்ணப் போட்டிகள் மிகவும் பிரசித்தி பெற்று வருகின்றன. இதற்கு உதாரணமாக 1999 பெண்கள் உலக கிண்ணப் போட்டிகளில் இறுதியாட்டம் அமெரிக்கா, சீனா, Rose Bowl விளையாட்டு அரங்கில் 90,782 ரசிகர்கள் பார்த்து ரசித்தார்கள். Hockey, Baseball ஆகிய விளையாட்டில் சராசரி 30 அல்லது 40 ஆயிரம் ரசிகர்களைக் கொண்டதே. ஆனால் பெண்கள் உதைபந்- தாட்டத்தை பார்ப்பதற்கு 90,000 ரசிகர்கள் ஒரு மைதானத்தில் கூடினார்களா என்று முழு உலகமுமே மூக்கில் விரலை வைத்தது.

இதற்குப் பரிசாக 2003ல் சீனாவில் நடைபெற விருந்த உலக கிண்ண போட்டிகள், சார்ஸ் நோயை காரணம் காட்டி, 1999ல் சிறப்பாக நடத்தி முடித்தமைக்கு காரணம் காட்டி, பணப் புழக்கத்தை மையமாக வைத்து மீண்டும் அமெரிக்காவையே நடத்த அனுமதிப்பது என FIFA தீர்மானித்தது. மீண்டும் அமெரிக்கா தனது பண பலத்தை காட்டி மிகவும் திறமையாக நடத்தி முடித்துள்ளது என்றே கூற வேண்டும்.

செப்ரம்பர் 20ம் திகதி தொடங்கி ஒக்டோபர் 12ம் திகதியுடன் 16 நாடுகள், 23 நாட்களில், 32 ஆட்டங்கள் நடைபெற்று முடிந்துள்ளன. ஆண்கள் உலக கிண்ணத்தைப் போலவே 4 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் பெண்கள் உலக கிண்ணம் 2003 உலக கிண்ணம் 4வது உலக கிண்ணமாகும். 1991ம் ஆண்டு சீனாவில் முதன் முதல் உலக கிண்ண போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1991 இறுதியாட்டத்தில் நோர்வே & அமெரிக்கா மோதி 1:2 என்ற கோல் விகிதத்தில் அமெரிக்கா வென்றது.

1995ம் ஆண்டு சுவீடனில் நடைபெற்ற உலக கிண்ணப் போட்டிகளில் இறுதி ஆட்டத்தில் ஜேர்மனி & நோர்வே மோதி 0:2 என்ற கோல் அடிப்படையில் நோர்வே சாம்பியன் பட்டத்தை வென்றெடுத்தது. 1999 அமெரிக்காவில் நடைபெற்ற உலக கிண்ண இறுதியாட்டத்தில் அமெரிக்கா & சீனா மோதி பனால்டி உதைகள் மூலம் 99' சம்பியன் பட்டத்தை அமெரிக்கா வென்றெடுத்தது. இந்த இறுதிப் போட்டி எந்தவொரு உதைபந்தாட்ட ரசிகர்களும் இலகுவில் மறந்து விட முடியாத ஒன்று. . லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் Rose Bowl ஸ்டேடியத்தில் 90,000 ஆயிரம் ரசிகர் முன்னிலையில் விறுவிறுப்பாக நடைபெற்று அமெரிக்கா இறுதியில் வென்றது.

2003 உலக கிண்ண் விபரங்களை இங்கு பார்ப்போம்:

| Group A | Group B | Group C | Group D |
|---|---|---|---|
| USA | NORWAY | GERMANY | CHINA-PR |
| SWEEDEN | FRANCE | CANADA | GHANA |
| NIGERIA | BRAZIL | JAPAN | AUSTRALIA |
| KOREA-DPR | KOREA REP | ARGENTINA | RUSSIA |

உண்மையில் இந்த உலக கிண்ணப் போட்டி 2003 கனடா நாட்டு உதைபந்தாட்ட வீராங்கனைகளுக்கு உலக அளவில் பெருமதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது. உலக கிண்ணப் போட்டிகள் தொடங்குவதற்கு முன்பு FIFA World ranking இல் 1.USA 2.Norway 3.Germany 4.China PR. 5.Sweeden 6.Brazil, கனடா 12வது இடத்தில் இருந்தது. ஆனால் Olympic champion - 2000, 1999 Runner-up விருதுகளைப் பெற்று உலகில் 4வது இடத்தில் உள்ள சீனாவை 12வது இடத்தில் உள்ள கனடா கால் இறுதியாட்டத்தில் வீழ்த்தி சாதனை படைத்துள்ளது. அதுமட்டுமல்லாமல் கடந்த நான்கு உலக கிண்ணப் போட்டிகளிலும் முதல் முறையாக கால் இறுதி, அரை இறுதி ஆட்டங்களுக்கு தகுதி பெற்று கனடா சாதனை படைத்துள்ளது.

நான்கு Group களிலும் மிகவும் கடினமானவை Group Aயும், Cயும் ஆகும். ஏனெனில் அமெரிக்காவும் ஜேர்மனியும் ஒரு அரை இறுதி ஆட்டத்திலும், Sweeden உம் கனடாவும் அடுத்த அரை இறுதி ஆட்டத்திலும் மோதின. FIFA வின் U-19 (2002) உலக கிண்ணப் போட்டிகளில் இறுதியாட்டத்தில் அமெரிக்காவுடன் கனடா மோதி மயிரிழையில் அமெரிக்கா வெற்றி கொண்டது. இதுவே கனடாவின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. இதில் முக்கியமாக உலக அரங்கில் Sinclair - U19 உலக கிண்ணத்தில் MVP, Golden shose இரு விருதுகளையும் வென்ற முதல் கனடிய பெண் உதைபந்தாட்ட வீரர் அறிமுகப்படுத்தப்பட்டார்.



இவ் வருடம் நோர்வே நாட்டுக்காரர் ஆன Even Pellerud பயிற்சியாளர் ஆக இளம் கனடிய அணி உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது இதில் ரொறன்ரோ Oakville நகரைச் சேர்ந்த 16 வயதுடைய Kara lang, ரொறன்ரோவைச் சேர்ந்த Christine Latham அவர்களும் சிறப்பாக விளையாடி உலக ரசிகர்களின் கவனத்தை தம் பக்கம் திருப்பினார்கள். Kara, Christine ஆகிய இரு வீரர்களும் 10 வயதில் இருந்தே விளையாடி வரும் ரொறன்ரோ, Oakville கழகங்களுக்கு நடுவராக கடமையாற்றி வருகின்றேன் என்பதை பெருமையாக இங்கு கூற விரும்புகின்றேன். இவர்களைச் சிறுவயதில் இருந்தே அவதானித்து வருபவன் என்பதால் 16 வயதுடைய Kara Lang உலகிலேயே சிறந்த உதைபந்தாட்ட வீராங்கனை என்ற விருதை நிச்சயமாக ஒரு நாள் பெறுவார் என்பதை உறுதியாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். முதல் அரை இறுதியாட்டத்தில் இந்த உலக கிண்ணத்தில் ஜேர்மனியும், அமெரிக்காவும் மோதிய போட்டியை யாருமே மறந்துவிட முடியாது. போட்டியின் போது அமெரிக்காவின் ஆதிக்கமே இருந்தாலும், ஜேர்மனியின் தடுப்பு ஆட்டத்தை தகர்க்க முடியாமல் அமெரிக்கா ஆட்டம் கண்டு 0:3 கோல் அடிப்படையில் ஜேர்மனி இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது. இந்தப் போட்டியில் Kristine Lilly (USA) அவர்களும் ஜேர்மனியை சேர்ந்த Prinz Birgit அவர்களும் உலக ரசிகர்கள் கவனத்தைத் தம் பக்கம் கவர்ந்தனர். Prinz இந்தப் போட்டியில் 7 கோல்களை மொத்தமாகப் போட்டு சிறந்த வீரர் விருதையும் பெற்றுக் கொண்டார்.

அடுத்த அரை இறுதி ஆட்டத்தில் மோதிய கனடாவும், சுவீடனும் விறுவிறுப்பாக மோதி சுவீடன் வெற்றி ஈட்டி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது. கனடா அணி துரதிர்ஷ்டமாக மூன்று சிறந்த வீரர்கள் காயம் காரணமாக வெளியேறியதன் மூலம் கனடா சுவீடனிடம் 1:2 என்ற கோல் அடிப்படையில் தோல்வியுற்றது. முதல் சுற்றில் ஆர்ஜன்ரீனாவை 0:3, யப்பானை 1:3 என்ற கோல் அடிப்படையில் கனடா அணி வெற்றி பெற்றதை யாரும் மறக்க முடியாது.

இறுதியாட்டத்தில் ஜேர்மனியும், சுவீடனும் மோதி Golden Goal முறை மூலம் Nia Kunzer over time இல் கோலை போட்டு ஜேர்மனி 2003 உலக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. ஐரோப்பிய சாம்பியன் ஆன ஜேர்மனி 1999ம் ஆண்டு நடைபெற்ற உலக கோப்பையில் கால் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவிடம் தோற்றதிற்கு இம் முறை அமெரிக்காவை ஜேர்மனி பழி தீர்த்துள்ளது. அண்மைக் காலங்களில் ஜேர்மனியும் கனடா அணியும் மிகப் பெரிய முன்னேற்றங்களை அடைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# எனது குக்கிராமம் ஆலங்குளம்

## ஐம்பது வருடங்களுக்கு முன்னால்

அது ஒரு குக்கிராமம். சண்டிலிப்பாய் எனும் பெரிய கிராமத்தின் ஒரு பகுதியாகிய வடக்குச் சண்டிலிப்பாயில் சின்னத் தம்பிப் புலவரால் இலக்கியத்தில் இடம் பிடித்த கல்வளைக்கு வடக்கே யாழ்ப்பாணத்திலே நான் அறிந்த வரையில் கண்ணகிக்கு முதல் ஆலயம் கண்ட அங்கணாக் கடவைக்கு மேற்கே அமைந்த இச்சிறு கிராமத்தில் எண்ணிப் பார்த்தால் ஐம்பது வீடுகள். அவற்றில் இரண்டு மாத்திரமே ஓட்டினால் வேயப்பட்ட கல் வீடுகள். அவற்றில் ஒன்று மலேயாவில் தொழில் பார்த்துக் கொண்டிருக்கும் எனது உறவினரினது. மற்றையது சின்னப்பாப்பா என எல்லோரும் உறவு சொல்லி அன்போடு அழைக்கும் ஓய்வு பெற்ற மராமத்து ஓவர்சியர் அவர்களுடையது. மற்றவை யாவுமே பனை ஓலையால் வேய்ந்தவை. சின்னப்பாப்பா மிகவும் நல்லவர். வருஷப்பிறப்பு என்றால் ஊரில் உள்ளவர்கள் எல்லோருக்கும் கைவிசேடம் அவர் வீட்டில் தான். எனக்கு அவர் ஞாபகம் மெலிதாகவே உள்ளது. ஒரு சில முறைகள் தான் பார்த்திருப்பேன். வயதானவர் பொதுநிற மேனி. முறுக்கிய வெள்ளை மீசை, எப்பொழுதும் மழித்த முகம், தலையில் கன்னங்களில் பிடரியில் மாத்திரம் வெள்ளை மயிர். மிகுதிப் பிரதேச மயிர் உதிர்ந்து விட்டதன் காரணமாக வெண்மண்டையாகக் காட்சி தரும். பணம் போதிய அளவு இருப்பதற்கு அறிகுறியாக பற்களில் சில பவுண் முலாத்துடன் காணப்பட்டன. வெள்ளை வேட்டி, சேட், கழுத்தை சுற்றியபடி அணி செய்யும் வெள்ளைப் பரமாஸ் சால்வை சகிதம் ஒரு கையில் வெள்ளிப் பூண் போட்ட கைத்தடியும் மறுகையில் பற்ற வைத்த கோடாப் போதாத சுருட்டுமாக இடைக்கிடை அவர் நடை போவதைக் கண்டுள்ளேன். தோற்றத்தில் கம்பீரம் இல்லாவிட்டாலும், நடையில் ஒரு பெருமனித பாவனையும் மிடுக்குமுடன் மரியாதைக்குரியவராக வலம் வந்தார். இவர் தவிர ஒரு பிராமணக் குடும்பம் கோவில் வீதியில். இக்கோவிலுக்குக் கூட இரண்டு பெயர்கள். சாதாரணப் பெயர் பிள்ளையார் கோவில் ஆனால் உத்தியோகபூர்வப் பெயர் முருகமூர்த்தி கோவில். பிராமணக் குடும்பத்தின் தலைவரே அந்த ஆலயத்துக்கும் வேறோர் ஆலயத்துக்கும் பூசகர். கோவிலுக்குப் பெரிதாய் ஒன்றும் வருமானம் இல்லை. எனவே ஆலயத்தை நம்பி குடும்பத்தை ஓட்ட முடியாது. ஐயர் அவர்கள் மிகப் பிரபலமான சாத்துப்படி ஐயர். அதாவது ஆலய உற்சவங்களின் போது பல ஆலயங்களிலே உற்சவமூர்த்திக்கு கை, கால்கள், முகம் எல்லாம் பொருத்திப் பெரிதாக்கிச் சோடனை செய்வார்கள். இப்படிச் சோடனை செய்வது சாத்துப்படி எனப்படும். ஐயர் அவர்கள் இந்த வேலையில் மிகப் பிரபலம், தீவுப் பகுதிகளுக்குக் கூட இவரை விசேடமாக இட்டுச் செல்வதைக் கண்டுள்ளேன். இந்த ஐயர் வீட்டிலே தான் நான் முதல் முதலாக எறிமாடன் பற்றி அறிந்தேன். அதென்ன எறிமாடன் என்று கேட்கிறீர்களா? அது ஒரு பிசாசு. யாரோ செய்வினை செய்து எறிமாடன் எனும் கெட்ட பேயின் மீது ஏவி விட்டு விட்டார்களாம். அது எறிமாடன் ஐயர் வீட்டிற்கு வந்து மறைந்திருந்தபடி கல் எறிகிறதாம். ஊரவர்கள் எல்லோரும், சென்று பார்த்தார்கள். நானும் அதில் ஒருவன். எப்படியோ பேய் ஓட்டுபவர் வந்து பலநாள் முயற்சியின் பின்னர் எறிமாடனை ஊரை விட்டே ஓட்டிவிட்டார். பின்னர் எறிமாடன் அஇந்தப் பக்கமாக இன்றுவரை வந்ததாகத் தெரியவில்லை.

ஒரு கத்தோலிக்க குடும்பமும் அங்கு வாழ்ந்து வந்தது. அவர்கள் எமது உறவினர். மதம் மாறியவர்கள். கணவனும் மனைவியும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள். இவர்களை மதம் மாற்றியவர் எனது பாட்டாவின் உடன் பிறந்த சகோதரர். அவர் இளம்பராயத்திலேயே மதம் மாறியமையால் படித்து ஆசிரிய கலாசாலையில் போதனாசிரியராக பதவி பெற்றுப் பதவிசாக வாழ எனது பாட்டா மண்ணோடு போராடி வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு இருந்தார்.

மதம் மாறியமையால் கொஞ்சம் படித்து ஆசிரியர்களாக நியமனம் பெற்ற அவர்கள் வீட்டுக்கு தையலம்மா வீடு ஊராரிட்ட சிறப்புப் பெயர். ஊரிலே உள்ளோரில் இன்னும் இருவர் ஆசிரியர்கள். ஒருவர் ஊரிலேயே முதல் முதலாக பாலபண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்த பெருமைக்குரியவர். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் இந்தப் பாலபண்டிதர், பண்டிதர் எல்லாம் சில்லறை விஷயம். எனவே அப்பட்டத்துடன் ஆசிரியத் தொழில் எடுப்பதும் கடினம். எடுத்தாலும் நல்ல ஊதியம் பெறுவது அதனிலும் கடினம். இந்தக் கல்விமான் தோட்டப் பாடசாலை ஒன்றினில் ஆசிரியராகக் கடமையாற்றினர். எனினும் பண்டிதராகும் கஷ்டம் அவருக்குத் தானே புரியும். அதனால் தனது சகோதரியின் பிள்ளைகட்கு தான் எடுத்த பட்டத்தை நினைவு கூருமுகமாக பண்டித எனத் தொடங்கும் பெயர்களை வைத்தே பெருமைப்பட்டார். இன்னொருவர் அரசாங்கத்தில் இலிகிதராகச் சேர்ந்து பதவி உயர்வு பெற்று உதவி அரசாங்க அதிபர் பதவி வரை எட்டியவர். ஆனால் ஆலங்குளாய்க்கு எட்டாத தூரத்தில் மனைவியின் ஊராகிய ஆனைக் கோட்டையில் குடியேறிவிட்டார். இருந்தாலும் பிறந்த ஊரை மறக்காமல் தனது சகோதரியைப் பார்க்க இடையிடையே வருவார். ஏனைய ஊரவர்கள் எல்லோரும் முழுநேர விவசாயிகளே.

பொதுவாக கிராமப் புறங்களிலே உறவு முறைக் கல்யாணங்கள் தான் நடந்து வந்தன. அதன் விளைவாக கிராம மக்களிடையே ஒரு நெருக்கமான உறவு நிலைபெறவே செய்தது. வெளியிடங்களில் இருந்தும் சிலர் கல்யாணம் காரணமாக ஊரில் வந்து குடியேறாமல் இல்லை. அவர்களைப் பெருமைப்படுத்துதல் எனும் சாக்கிலே ஊரவர்கள் சுலபமாக இனங்காண்பதற்கு அனுகூலமாக அவர்களின் பெயருக்கு முன்னால் அவர்களின் பிறந்த ஊர்ப் பெயரையும் சேர்த்து அழைப்பதற்கும் நம்மவர்கள் தவறவில்லை. அதன் விளைவாக வந்த பெயர்களே இணுவில் கணவதியான், உடுவில் சங்கரப்பிள்ளை, கைதடி வல்லிபுரம் போன்ற பெயர்கள்.

### புளியடி வயிரவர்

ஆலங்குளாயின் வடபுறத்துக் காவல் தெய்வமாகப் புளியடி வயிரவர் உள்ளார். அவர் ஆலமரம் ஒன்றின் கீழ் கிழக்கே பார்த்தபடி அமர்ந்திருக்கிறார். புளியடி வயிரவர் என்று பெயர் வைத்தழைத்தாலும், அங்கே ஒரு புளியமரம் இருந்ததற்கு எந்தவிதமான அறிகுறியும் இல்லை. பூர்வ ஜன்மத்தில் ஒரு புளிய மரம் வயிரவருக்கு குடியிருக்க இடம் கொடுக்க, அங்கே எப்படியோ ஒரு ஆலமரம் முளைக்க, ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை ஓட்டிய கதையாக புளியமரத்தை ஆலமரம் ஆலிங்கனம் செய்து அறவே ஒழித்துவிட வயிரவர் ஆலமரமே தஞ்சம் என குந்தியிருந்தது தான் தலபுராணமோ என எண்ண வைக்கிறது.

ஆனாலும் சண்டிலிப்பாய் சற்று வித்தியாசமான ஊர் என்றே கூற வேண்டும். மீனாட்சி அம்மன், கண்ணகை அம்மன், மாரியம்மன் என மூன்று பெண் தெய்வங்களுக்குத் தனித்தனியே ஆலயங்கள் சுற்றாடலில் அமைய, வீரபத்திரருக்கோர் ஆலயம் மேற்கு எல்லையில் நிற்க என வித்தியாசமான பக்தி மார்க்கம். ஆனாலும் வயிரவர் தான் அதிக இடங்களில் ஆரோகணித்திருந்தார். ஒரு குடில் கூட இல்லாமல் வெட்ட வெளியிலே மரம் ஒன்றிற்குக் கீழே இருப்பதற்கு ஒன்றில் அவர் அல்லது பிள்ளையார் மாத்திரம் தானே சம்மதிப்பார்கள். காவல் தெய்வம் என்றமையால் அறையுள் பூட்டி வைக்க மக்கள் விரும்பவில்லைப் போலும். அப்படி இருந்தால் தானே நினைத்த பொழுது

26ம் பக்கம் வருக

பொ. கனகசபாபதி

# மகாவித்துவான் இணுவில் ந. வீரமணி ஐயரின் ஐம்பதாண்டுப் பணிகளுக்கு நன்றி கூறிய விழா

ஆலயச் சுற்றாடலில் தமிழும் சைவமும் வளர்க்கும் சர்வ கலைஞர்களையும் உள்ளடக்கிய ஒரு கிராமம் இணுவில். திசைகளைக் கூறி இந்தக் கிராமத்து மக்கள் அடையாளம் காணப்படுவதில்லை. ஆலயத்தின் பெயரைக் கூறியே இணுவில் மக்கள் தங்கள் இருப்பிடத்தைத் தெரிய வைப்பரென்றால், இங்குள்ள ஆலயங்களுக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு புரியும்.

இந்தக் கிராமத்தின் பெயரை அகில உலகமும் தெரியச் செய்த ஒருவர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்கள். கடந்த மாத முற்பகுதியில் இயற்கையெய்திய இவரது நினைவு வைபவம் கடந்த மாதம் 19ம் திகதி இணுவில் திருவூர் ஒன்றியத்தினால் கனடா கந்தசுவாமி கோவில் சபா மண்டபத்தில் நடத்தப்பெற்றது.

இணுவிலுக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் ஆன்மீகவாதி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் இவ்வைபவத்தில் பங்கேற்று, நீண்டதொரு உரையாற்றினார். வீரமணி ஐயர் அவர்களின் இளமைக் கால வறுமை உட்பட்ட பலருக்கும் தெரிந்திராத பலவேறு வாழ்க்கைச் சம்பவங்களை இவர் எடுத்துரைத்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வீரமணி ஐயாவுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்க மறுத்த கதையை திரு. ஆறுதிருமுருகன் விபரித்தபோது பலரது கண்களும் கலங்கிக் கரைந்தன. (இவ்வாறாக தகுதியானவர்களுக்குக் கௌரவம் வழங்க மறுத்த வகையில் யாழ். பல்கலைக் கழகத்துக்கு நீண்ட வரலாறு உண்டு).

கலைஞர்கள் தனதேவி மித்ரதேவா, விஜயலட்சுமி சீனிவாசன், கேசவமூர்த்தி, வர்ண ராமேஷ்வரன், பொன். சுந்தரலிங்கம், அந்தணர்கள் பிரம்மஸ்ரீ ப. விஜயகுமார குருக்கள், சிவஸ்ரீ தியாக முருகானந்தக் குருக்கள், பிரம்மஸ்ரீ ச. இரத்தினசபாபதிக் குருக்கள், திருவாளர்கள் தி. விசுவலிங்கம், பொ. கனகசபாபதி, வி. கந்தவனம், ஊடகவியலாளர்கள் வே. இராஜலிங்கம் (நம்நாடு), திரு எஸ். திருச்செல்வம் (தமிழர் தகவல்), ந. கமல் (உலகத் தமிழர்), சிவா சண்முகசுந்தரம் (ரிவிஜ தொலைக்காட்சி), மற்றும் திருமதி தேவி பத்மநாதன், திரு. எஸ் பத்மநாதன், ஒன்றியத் தலைவர் த. ஸ்ரீஸ்கந்தராஜா, மற்றும் இணுவைபூர் பிரமுகர்கள் உட்படப் பலதுறை சார்ந்தவர்களும் இங்கு உரையாற்றி அமரர் வீரமணி ஐயரின் நற்பணிகளை நினைவு கூர்ந்தனர்.

திரு. க. அருட்சோதி வைபவத்தினை இயலும் இசையும் இணைத்துத் திறம்பட நடத்தினார். மண்டபம் நிறைந்து திரண்டிருந்த மக்கள் கூட்டம் விழாவின் சிறப்புக்கும் வீரமணி ஐயர் மீதான பக்திக்கும் நல்ல எடுத்துக்காட்டு.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரால் கௌரவிக்கப்பெற்ற பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் பணிகளை நினைந்து அதற்கு ஏதாவது கைங்கரியம் செய்ய எவராவது விரும்பினால், அவர்களின் பணிவான கவனத்துக்கு 'தமிழர் தகவல்' பின்வரும் வேண்டுகோள்களை முன்வைக்க விரும்புகின்றது.

1. ஐயா அவர்களின் படைப்புகள் பல எழுத்து வடிவாக்கத்தில் அவரது வீட்டில் துணிகளால் பக்குவமாகக் கட்டி அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்துமே அச்சுவாகனம் ஏறவேண்டியவை. அவைகளைப் பேணிப் பாதுகாக்கத் தனியான காப்பகம் ஒன்று எந்தத் தாமதமுன்றி உருவாக்கப்பட வேண்டும்

2. இவைகளைப் பரிசீலனையிட்டு, வரிசை அடிப்படையில் நூலாக்கவோ, அல்லது ஒலித் தட்டு வடிவமாகவோ வெளிக்கொணரவென வெளியீட்டகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். முதலில் அவரது வாழ்க்கை வரலாற்றினை, முக்கிய சம்பவங்களுடனும் ஒளிப் படங்களுடனும் வெளியிட வேண்டும்.

3, எந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஐயாவுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்க மறுத்ததோ அதே பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பீடத்தில் ஐயாவின் பெயரில் புலமைப் பரிசில் திட்டமொன்று நிறுவப்பட வேண்டும்.

## தமிழர் தகவல் 13வது ஆண்டு பூர்த்தி மலர்

தமிழர் தகவல் 13வது ஆண்டு மலர் தயாரிப்பு வேலை தற்போது நடைபெற்று வருகின்றது. அதற்கான ஆக்கங்களைப் பலரும் உற்சாகத்துடன் அனுப்பி வைத்துள்ளனர். 2004 பெப்ரவரி மாத முற்பகுதியில் நடைபெறவுள்ள ஆண்டு விழாவில் மலர் வெளியிட்டு வைக்கப்படும். ஆண்டுக்கொரு தடவை நடைபெறும் 'தமிழர் தகவல்' விருதுகள் வழங்கும் விழாவுடன் இணைந்ததாக மலர் வெளியீட்டு நிகழ்ச்சியும் இடம்பெறும். அழைக்கப்படுபவர்கள் மட்டுமே பங்குபற்றும் இவ்விழாவுக்கான அழைப்பிதழ்கள் 2004 ஜனவரியில் அனுப்பப்படும். மேலதிக விபரங்கள் தேவைப்படுபவர்கள் 416 920 9250 இலக்கத்தில் தங்கள் விபரங்களைப் பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும். அல்லது P.O.Box - 3, Station - F Toronto, Ontario, M4X 1W5 என்ற முகவரிக்கு எழுதவும்.

## துணிச்சலான வழக்கு

கனடிய மத்திய அரசாங்கத்துக்கு எதிராகத் துணிச்சலான சட்ட நடவடிக்கையை எடுத்துள்ளார் தமிழர் ஒருவர். கனடாவுக்குச் சில வருடங்களுக்கு முன்னர் தமது மனைவி பிள்ளைகளுடன் சுதந்திரக் குடிவரவாளராகப் புள்ளிகள் அடிப்படையில் தெரிவாகி வந்தவர் இவர். தமது கல்வி, அனுபவம் ஆகியவைகளின் அடிப்படையில் தமக்குக் கனடாவில் வேலைவாய்ப்பு இருப்பதாக கனடிய விசா அலுவலகம் கூறியதை நம்பியே தாம் தமது குடும்பத்துடன் கனடா வந்ததாகவும், இரண்டு வருடங்களாகியும் தமக்கோ மனைவிக்கோ இன்னமும் தங்கள் தகைமைக்குரிய வேலை எதுவும் கிடைக்கவில்லை என்பதும், தாம் கொண்டுவந்த முழுப்பணமும் முடிவடைந்து விட்டது என்பதும், கனடாவின் பாரபட்ச நடவடிக்கையே தமது வேலையற்ற நிலைக்குக் காரணம் என்பதும் இவரது குற்றச்சாட்டுகள். இந்த வழக்கு விசாரணையைப் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

# மணிமேகலைப் பிரசுரத்தின் கண்காட்சிகளும் கண்கட்டி வித்தைகளும்

தமிழ்நாட்டில் இயங்கும் மணிமேகலைப் பிரசுரம் தொடர்பான சில தகவல்களைக் கடந்த இரண்டு இதழ்களிலும் எழுதியிருந்தேன். பரந்துபட்ட அளவில் இது வாசிக்கப்படுகின்றது என்பதை நேரிலும், தொலைபேசியிலும், கடித மூலமும் பலர் அறியத் தந்துள்ளனர். ஏகப்பட்ட வரவேற்பு இதற்கு இருப்பதையும் அறிய முடிகின்றது.

இங்கிலாந்து, ஜேர்மனி, சுவிஸ் போன்ற மற்றைய புலம்பெயர் நாடுகளிலுள்ள சிலர் மணிமேகலையாரின் மேலும் சில 'விளையாட்டுக்களை' அறியத் தந்து அவற்றையும் சமூகத்தின் பார்வைக்கு எடுத்துச் செல்லுமாறு உரிமையுடன் கேட்டுள்ளனர். கிடைத்துவரும் தகவல்களைப் பார்த்தால் இந்தக் கட்டுரைத் தொடர் ஒரு கலமாக (column) அன்றி முழுப் பக்கமாக, ஒரு வருடத்துக்குத் தொடர்ந்தாலும் ஆச்சரியப்பட முடியாது.

கனடாவிலிருந்து வெளிவரும் 'ஈழநாடு' பத்திரிகை இரண்டு வருடங்களுக்கு முன்னர் தனது பதிப்பொன்றில், "மணிமேகலைப் பிரசுரமா? 'மணி மேக்கிங்' (Money Making) பிரசுரமா?" என்றொரு கேள்வியை எழுப்பியிருந்தது. உண்மைதான்! மணிமேகலையார் தம்மைத் தமிழ்த்தொண்டு புரிவதாகக் கூறாமல், ஈழத்தமிழர் பெயரால் சுரண்டல் தொழில் புரிகின்றேன் என்று சொல்லியிருந்தால் இந்தப் பிரச்சனைக்கே இடமில்லாது போயிருக்கும். அதனைவிட்டு, எம்மவரின் தலையின் தொடர்ந்து அரைத்துக் கொண்டு பணம் பண்ணும் முயற்சியில் ஈடுபட்டு வருவதால், சில விடயங்களை அம்பலத்துக்குக் கொண்டுவர வேண்டியது தவிர்க்க முடியாததாகவுள்ளது.

இலங்கையில் நடந்த இரண்டு மணிமேகலைக் கண்காட்சி பற்றி இந்த இதழில் குறிப்பிடுவதாகக் கடந்த இதழில் சொல்லியிருந்தேன். மலிவு விலையும் கண்காட்சியும் என்பதுவே இதன் தலைப்பு. ஒன்று யாழ். பல்கலைக் கழகத்திலும், மற்றையது தெல்லிப்பளையிலும் இடம்பெற்றது. இதற்கான புத்தகத் தொகுதிகளை ஒரு வானை வாடகைக்கு அமர்த்தி கொழும்பிலிருந்து எடுத்துச் சென்றிருந்தார் அதன் நிர்வாகி.

தரமான இலக்கிய மற்றும் திறனாய்வு நூல்களை வாங்கலாமென்று பலர் நாடிச் சென்றனர். பலத்த ஏமாற்றமே! கறிவேப்பிலையின் மகிமை, வெங்காயத்தின் சூடசமும், சூட்டைத் தணிப்பது என்ற வகையில் அப்பா தமிழ்வாணன் காலத்து நூல்களே அதிகம். வெளிநாட்டுத் தமிழர்கள் பணம் கொடுத்துப் பிரசுரித்த நூல்கள் ஒன்றுகூட இல்லை. அநேகமான புத்தகங்களும் 20 அல்லது 30 அல்லது 40 பக்கங்களைக் கொண்டவை. படைப்பிலக்கியங்களின் வாசனை அங்கு இருக்கவில்லை. 'கண்காட்சி' என்ற பெயரில் 'சந்தை' நடத்துவதே மணிமேகலையாரின் தந்திரம்.

தமது நூல் வெளியீட்டு முயற்சி பற்றியும் அதற்கான அட்வான்ஸ் பற்றியும் பலரிடம் கதை விட்டுப் பார்த்தும் எவரும் வலைக்குள் வீழ்வதாக இல்லை. புத்தக விற்பனையும் ஜோராக இல்லை. இருபதாண்டுகளுக்கு முந்தியதான நிலையில் ஏமாற்றப்படக்கூடியதாக இன்றைய யாழ்ப்பாணச் சமூகம் இல்லை என்பதை விரைவாக உணர்ந்து கொண்டார்.

ஈழப் போராளிகளுக்கு தமிழ்நாடு வழங்கிய ஆதரவு பற்றியும், தாமொரு விடுதலைப் புலி ஆதரவாளர் என்பது போலவும் ஒப்பனை செய்தும் பார்த்தார். அதுவும் பயனளிக்கவில்லை. மறுபுறத்தில் பல்கலைக் கழக மாணவ குழாம் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிப்பது மகா கஷ்டமாக இருந்ததையும் உணர்ந்தார்.

"தமிழ்நாட்டில் தலைசிறந்த படைப்பாளிகள் மணிமேகலையைத் தமது பிரசுரத்துக்கு நாடாத காரணமென்ன? படைப்புத் தராதரத்தில் மணிமேகலை அடிமட்டத்தில் நிற்பது ஏன்?" என்ற யதார்த்த வினாக்களுக்கு அவரால் பதிலளிக்க முடியாது போயிற்று. பலமுறை திணறி விட்டார். இப்போதைக்கு கண்காட்சியும் வேண்டாம்; விற்பனையும் வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து, கொழும்பிலிருந்து வாடகைக்கு எடுத்து வந்த வானை அதன் சாரதியுடன் அனுப்பி விட்டார்.

இன்றைய காலகட்டத்தில் வாசிப்பு ரசனையற்ற நூல்களை 'அன்பளிப்பு' என்ற பெயரில் நின்றவர் போனவர்களுக்கு வழங்கினார் இதன் மூலம் நற்பெயரையும் அனுதாபத்தையும் யாழ்ப்பாணத்தாரிடம் பெறலாமென்பது இவரது சூழ்ச்சி. இதனையே மூலதனமாக வைத்து சிலரது புத்தகங்களைப் பிரசுரிக்க 'அட்வான்ஸ்' பெற முயன்ற குயுக்தியும் பலனளிக்கவில்லை.

அடுத்த கட்டமாகக் குடாநாட்டிலுள்ள சில பிரமுகர்களைச் சந்திக்கத் திட்டமிட்டார். இவரது யாழ்ப்பாணப் 'பினாமி' ஒன்றே இதற்கான ஒழுங்குளைச் செய்தது. அனேகமான சந்திப்புகளும் எதிர்பார்த்த அளவுக்கு 'சக்சஸ்' ஆகவில்லை. இவர் சந்தித்த முக்கியஸ்தர்களில் ஒருவர் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகி. தலைசிறந்த சமயச் சொற்பொழிவாளர். பல சமய நூல்களை அச்சடித்து வெளியிட்டவர். இவர் தமது 'வாழ்வாங்கு வாழ' என்னும் நூலின் பிரதியொன்றினை மணிமேகலைக்காரருக்கு அன்பளிப்புச் செய்தார்.

சில வாரங்களின் பின்னர் இந்த நூலின் பிரதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள புத்தகக் கடைகளில் விற்பனைக்கிருந்தன. அதுவும் நூலாசிரியையின் பெயர்கள் விரங்கள் தவறாக அச்சிடப்பட்டு. அன்பளிப்புப் பிரதியைத் தம்முடன் எடுத்துச் சென்று, எவரிடமும் அனுமதி பெறாமல் அதனைத் தமது மணிமேகலைப் பிரசுர வெளயீடாகப் பிரசுரித்து அவைகளை விற்பனைக்கு அனுப்பிய விடயம் பின்னரே தெரியவந்தது. இதற்குரிய பணம் எதுவும் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு அனுப்பப்படவுமில்லை.

துர்க்கை அம்மன் தேவஸ்தானம் பிரசுரத்திலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி, சில ஒழுங்கீனங்களையும் மணிமேகலையின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாம். சம்பந்தப்பட்ட பிழைகளைத் திருத்தி அடுத்த பதிப்பையும் பிரசுரித்த மணிமேகலைக்காரர்கள், அதன் சில பிரதிகளை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு அனுப்பியிருந்தாராம். எப்படியிருக்கிறது இவர்களின் வெளியீட்டு முயற்சி.

இதனைத் திருட்டு என்பதா? அல்லது திட்டமிட்ட மோசடி என்பதா?

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நூலை (அவரது அனுமதியின்றி) பிரசுரிப்பதன் ஊடாக மற்றைய எழுத்தாளர்களை வலைக்குள் வீழ்த்த எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகவும் இது அமையலாம் என்பது பலரதும் அபிப்பிராயம்.

ஆனால் இந்தச் சமாசாரம் குடாநாட்டின் அனைவருக்கும் தெரிய வந்து பலரது கண்களையும் விழிக்கச் செய்துவிட்டது.

யாழ்நகரிலிருந்து து. துஷ்யந்தன் அனுப்பிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டது. மணிமேகலை நிர்வாகி இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்க விரும்பினால் எழுதி அனுப்பலாம். ஆனால், அவரது வெளிநாட்டுப் 'பினாமி'களிடமிருந்து பதிலை எதிர்பார்க்கவில்லை.

அடுத்த இதழிலும் வரும்.

# முழக்கம் தனி அச்சகம்
## முதலாவது தமிழ்த் தினசரிக்கான அடிக்கல்

கனடியத் தமிழ் ஊடக உலகில் பல சாதனைகள் தற்போது மின்னாமல் முழங்காமல் இடம்பெற்று வருகின்றன. ரிவிஜ 24 மணி நேர தமிழ்த் தொலைக்காட்சி ஆரம்பம் இவற்றுள் முதன்மையானது. கனடிய பல்கலாசார வானொலி (CMR) நிலையத்துக்கான அனுமதி பெற்றமை இன்னொன்று. இவையிரண்டும் மின்னியல் ஊடகங்களுடன் சம்பந்தமானவை.

அச்சு ஊடக வளர்ச்சியைப் பொறுத்தளவில், வாராந்தம் பலவர்ண முகப்புடன் வெளியாகும் தமிழீழப் பற்றுப் பத்திரிகையான 'முழக்கம்' கடந்த மாதம் ஒரு மைற்கல் திருப்பத்தை ஏற்படுத்தியது. தனக்கெனத் தனியாக பத்திரிகையை அச்சடிக்கும் 'வெப்' அச்சு இயந்திரமொன்றினைச் சொந்தமாக்கி, அதற்கென 'அம்பு' என்ற பெயரில் ஓர் அச்சகத்தையும் உருவாக்கியமையே இதுவாகும்.

பத்திரிகை உருவாக்கம் பற்றியும், அச்சடிப்பு முறை பற்றியும் தெரியாதவர்களுக்கு இந்த முயற்சி சாதாரணமான ஒன்றாகவும், பத்தோடு பதினொன்று போலவும் தெரியலாம். ஆனால் இது உண்மையிலேயே ஒரு துணிச்சலான முயற்சி மட்டுமன்றி, எதிர்வரும் காலங்களில் தமிழ்த் தினசரி ஒன்றினைப் பிரசவிப்பதற்கான அடிக்கல்லாகும் என்பதை இத்துறையில் தோய்ந்த அனுபவசாலிகளால் மட்டுமே புரிய முடியும்.

முழக்கம் வெளியீட்டாளரும் ஆசிரியர்களுமான திரு - அன்பு தம்பதிகள் இந்த வகையில் கனடிய மண்ணில் அழியாத இடமொன்றினைப் பெற்றுள்ளனர். புதிய அச்சக ஆரம்ப விழா கடந்த மாதம் பல்துறையாளர்கள் முன்னிலையில் ஒரு வாழ்த்து விழாவாக இடம்பெற்றது.. கனடிய தமிழ்ப் படைப்பாளிகள் கழகத் தலைவரும், முழக்கத்துடன் ஆரம்ப காலத்திலிருந்து ஆத்மார்த்தமாக ஈடுபட்டு வருபவருமான திரு. வே. தங்கவேலு (நக்கீரன்) அவர்கள் அச்சகத்தினை வைபவ ரீதியாக நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அதனையடுத்த அவரது சிறப்புரையை அடுத்து, உலகத் தமிழர் இயக்கப் பிரதிநிதிகள் உட்பட தமிழ் மக்கள் மத்தியில் தமிழீழ உணர்வுடன் செயற்படும் பலவேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் வாழ்த்துக் கலந்த உரைகளை நிகழ்த்தினர்.

முழக்கம் பத்திரிகை தற்போது பலவர்ணத்தில் இந்த அச்சகத்தில் பிரசுரமாவதும், அச்சகப் பிரிவில் ரொறன்ரோ ஸ்டார், ரொறன்ரோ சன் பத்திரிகைகளில் கடமையாற்றிய வெள்ளை இனத்தவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகக் கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

'தீவகம்' வே. இராஜலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'நம்நாடு' பத்திரிகையும் இந்த அச்சகத்திலேயே தற்போது அச்சடிக்கப்படுகின்றது.

முழக்கம் நிறுவனம் விரைவில் தமிழ்த் தினசரி ஒன்றினைக் கொண்டுவரும் தகுதியும் தராதரமும் பெற்ற வெளியீட்டகம். இப்போது சொந்தமாக ஓர் 'வெப்' அச்சகத்தினையும், நிரந்தர ஊழியர்களையும் கொண்டுள்ளது. எனவே, தமிழ்த் தினசரியை வெளிக்கொணர்ந்து மற்றொரு சாதனையையும் புகலிட மண்ணில் நிகழ்த்த வேண்டுமென்பதே கனடியத் தமிழர்களின் விருப்பு; இது தேவையின் வேண்டுகோளும்கூட.

தமிழீழத்தில் மலரும் சுதந்திரத்துடன் ஒட்டியதாக, முழக்கத்தையடுத்து 'மின்னல்' வெளிவர வேண்டும். சாத்தியமான இப்பணியில் துணிச்சலுடன் திரு - அன்பு தம்பதிகள் இறங்க வேண்டும்! புதிய 'வெப்' அச்சகம் எல்லா வழிகளாலும் தமிழ் ஊடகத்துறைக்கு இம்மண்ணில் வழிகாட்ட வாழ்த்துக்கள்!

## மாவீரர் குடும்ப விபரங்கள் வேண்டி
## உலகத் தமிழர் இயக்கம் விடுக்கும் அறிவித்தல்

இந்த மாதம் (நவம்பர) மாதத்தில் வரவுள்ள மாவீரர் தினத்தையொட்டி மாவீரர்களின் குடும்பங்களைக் கௌரவிக்கவும், மாவீரர் விழாவில் மாவீரர்களது திருவுருவப் படங்களை மக்கள் அஞ்சலிக்காக வைப்பதற்காகவும், அவர்கள் தொடர்பான விபரங்களைத் தந்துதவுமாறு உலகத் தமிழர் இயக்கம் கேட்கின்றது. இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:

"இதுவரை மாவீரர் பற்றிய விபரங்களை எம்மிடம் கையளிக்காதவர்களையும், ஏற்கனவே அவற்றைத் தந்து பின் முகவரி மாறிச் சென்றவர்களையும் கீழே கேட்கப்பட்டிருக்கும் விபரங்களைத் தந்துதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஏற்கனவே தங்களால் கையளிக்கப்பட்ட விபரங்களைப் பரிசீலித்து, அவற்றில் எம்மால் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தவர்களது பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிகள் எமது அலுவலகத்தில் உள்ளதோடு, உலகத்தமிழர் இயக்கப் பிரதேசப் பொறுப்பாளர்களிடமும் இருக்கின்றன.

மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த உங்கள் குடும்ப விபரம் எங்களிடம் உள்ளதா என்பதை அறிய விரும்பின் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு, அல்லது அலுவலகத்திற்கு நேரில் வந்து அறியுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அவ்வாறு உங்கள் பெயர் விபரம் எமது பட்டியலில் இல்லையெனக் கண்டால் தாமதமின்றி எமது அலுவலகத்துடனோ அல்லது உலகத் தமிழர் இயக்கத் தொண்டர்களுடனோ தொடர்பு கொண்டு மாவீரர் குடும்ப விபரங்களையும் உங்களது குடும்பத்திலிருந்து மாவீரரானவரின் புகைப்படப் பிரதி ஒன்றையும் கையளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தேவையான விபரங்கள்:

அ. 1. மாவீரரது பெயர்
2. இயக்கப் பெயர் (கப்டன், மேஜர்... போன்ற அவர்களது தரத்துடன்)
3. பிறந்த இடம்
4. வீரச்சாவடைந்த திகதி
5. வீரச்சாவடைந்த இடம்

ஆ. 1. விபரம் தருபவரது பெயர்
2. முகவரி
3. தொலைபேசி இலக்கங்கள்
4. உறவுமுறை (பெற்றோர், துணைவர், உடன்பிறந்த சகோதரர்கள் மட்டும்)

மேற்குறித்த பணியைச் செவ்வனே செய்து முடிப்பதற்கு, உங்களால் இயன்ற அளவு விரைவில் விபரங்களைத் தந்துதவும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம".

தொடர்புகளுக்கு:
முகவரி:
39 Consentino Dr.
Scarborough,
Ontario.
M1P 3A3

தொலைபேசி இலக்கம்
416 335-0622

# சிவா திவ்யராஜனின்
# கவின் கலாலயா ஆண்டு விழா







திருமதி. சிவா திவ்யராஜனது கவின் கலாலயாவின் 15வது ஆண்டு நிறைவு விழா கடந்த மாதம் ரொறன்ரோவில் நடைபெற்றது. அவுஸ்திரேலியாவிலிருந்து வந்திருக்கும் இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் க. நடராஜா அவர்கள் பிரதம விருந்தினராகவும், இலங்கையிலிருந்து வந்திருக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. தங்கவேலாயுதம் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றி உரையாற்றின். இவர்களுடன் இசைக்கலைஞர் வர்ண ராமேஷ்வரன், அதிபர் பொ. கனகசபாபதி, கலைவர் வ. திவ்யராஜன் ஆகியோர் உரையாற்றுவதையும், கவின் கலாலயா மாணவர்கள் வழங்கிய சில நிகழ்ச்சிகளையும் இப்பக்கத்தில் ஒளிப்படங்களாகக் காணலாம்.






# கனடாவில் மூன்று வாரங்கள்
# ஆறு. திருமுருகனின் ஆன்மீகச் சொற்பொழிவுகள்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தைச் சேர்.ந்த செஞ்சொற் செல்வன் ஆறு. திருமுருகன் இரண்டாவது தடவையாகக் கடந்த மாதம் கனடாவுக்கு வந்திருந்தார். அக்டோபர் 16ம் திகதி முதல் இந்த மாதம் 2ம் திகதி வரை இவரது ஆன்மீகச் சொற்பொழிவுகள் இங்கு இடம்பெற்றன. கனடா ஐயப்பன் ஆலயம், கனடா கந்தசுவாமி கோவில், ரொறன்ரோ துர்க்கை அம்மன் ஆலயம், மொன்றியல் அருள்திரு முருகன் ஆலயம், ஸ்கபரோ பெரிய சிவன் ஆலயம், ஸ்காபரோ நல்லூர் முருகன் ஆலயம், மிசிசாகா ஜெயதுர்க்கா ஆலயம், ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம், பெரிய கோவில் என அழைக்கப்படும் றிச்மன்ட்ஹில் ஆலயம் ஆதிபராசக்தி ஆலயம் ஆகியவற்றில் கந்தர்சஷ்டி வேளையிலும் மற்றைய நாட்களிலும் இவரது சொற்பொழிவுகள் இடம்பெற்றன. பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் இச்சொற்பொழிவுகளைக் கேட்டு அகமகிழ்ந்தனர். சொற்பொழிவு நிகழ்த்திய ஆலயங்களில் அதன் பிரதம குருவானவர்களாலும், ஆலய நிர்வாகிகளாலும் இவர் கௌரவம் செய்யப்பட்டதுடன்,வருவாய் நோக்கமில்லாத இவரது சொற்பொழிவுகளுக்கும் சமூகப் பற்றுள்ள பொதுப் பணிகளுக்கும் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு ஆதரவும் வழங்கப்பட்டது.





மிசிசாகா சைவ சித்தாந்த மன்றத்தில் அதன் தலைவர் திரு. தி. விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்ற சிறப்பு வைபவத்தில் திரு. ஆறு. திருமுருகன் உரையாற்றினார். (மேலுள்ள படம்) மேற்படி மன்றப் பிரமுகர் திரு. சண்முகநாதன் தமது தாயாரின் ஞாபகார்த்தமாக பொதுப்பணிக்கான நிதியுதவியினை திரு. ஆறு திருமுருகனிடம் வழங்கினார். ரிவிஜ தொலைக்காட்சிக்காக திரு. பொன்னையா விவேகானந்தன் செவ்வி காண்பதை அருகில் காணலாம். ஸ்காபரோ முதுதமிழர் சங்க வாராந்த நிகழ்ச்சியில் திருமுருகன் அவர்கள் சிறப்புரையொன்றினை வழங்கி முதியோர்களுடன் கலந்துரையாடினார். மேடையில் சங்கத் தலைவர் திரு. பாலச்சந்திரன், பொருளாளர் திரு. சுப்பிரமணியம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பங்குபற்றிய சங்க உறுப்பினர்களில் ஒரு பகுதியினரையும் கீழுள்ள ஒளிப்படத்தில் காணலாம்.










# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

குடும்ப பல்வைத்தியர்

• General Dentistry • Orthodontics • Implants

சகல பல் வைத்திய சேவைகளும், கிளிப் போடுதல் ஆகியனவும்.

## RAINBOW VILLAGE DENTAL OFFICE

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8

திங்கள், செவ்வாய், புதன்(காலை), வியாழன், வெள்ளி, சனி
Near Kennedy Subway (Rainbow Village கட்டடத்தில்)

**(416) 266 5161**



புதிய முகவரியில் விசாலமான இடத்தில் சகல வசதிகளுடனும்......

## கொழும்பு போட்டோ ஸ்ரூடியோ

Division of St - Francis Photo

## DIGITAL PHOTO STUDIO

WEDDING,
BIRTHDAY,
ARANKETTAM,
BABY PHOTO,
FAMILY PORTRAIT,
PASSPORT, CITIZEN,
PUBERTY CEREMONY,
P.R CARD, ID PHOTO
ETC..........

**FREE FREE FREE**
2 - 5 x 7 Studio Portrait
Enlargement Free
(Couple or Family)
With Purchase of any
Passport, Citizen,
P. R Card, ID Photo
*(Picture Value $20.00)*



**இலவசம் இலவசம் இலவசம்**
பாஸ்போர்ட், சிற்றிசன்,
லாண்ட்ட போட்டோ, ஐ டி
படம் எடுக்க வரும் ஜோடிகள்,
குடும்பத்தினருக்கு
இரண்டு 5 x 7
ஸ்ரூடியோ போட்டோ இலவசம்
(அதன் பெறுமதி $20.00)

திருமணம்
பிறந்த நாள்
அரங்கேற்றம்
குடும்பப் படம்
குழந்தைப் படம்
பாஸ்போட், சிற்றிசன்
பூப்புனித நீராட்டு விழா
லாண்டட் போட்டோ ஐ டி
இன்னும் பல, பல.........

**DIGITAL SPECIAL EFFECT**
**FROM $25.00**

"Professional Photo & Videography
All Types of Video & Photographics Work"
"அனைத்து போட்டோ வீடியோ படப்பிடிப்புகள்,
எல்லா விதமான போட்டோ, வீடியோ வேலைகள்"

**DIGITAL VIDEO TRANSFER**
ANY TO ANY SYSTEM PAL, NTSC, SECAM
FROM VIDEO CASSETTE TO VCD OR DVD

**Digital Professional Enlargement**
From CD, Floppy, SD Midea,
Smart Media, Memory Stick
& Compact Flash

**COLOMBO PHOTO STUDIO**
**CEDARFACE PLAZA**
**2296 Eglinton Ave. East**
Unit #6, Lower Level (Basement)
Birchmount & Eglinton
**416 752 4444**




காஞ்சி சில்க் - பிரியா கொன்வினியன்ஸ், 41 டிவிசன் பொலிஸ்
நிலையத்திற்கு அருகில் உள்ள பிளாசாவில்

BESIDE THE 41 DIVISION POLICE, KANCHI SILK
& PRIYA CONVENENCE PLAZA

**போட்டோ செய்திகள்:**
உலகில் 35mm SLR Camera 5.000 டொலர்களுக்கு மேல் இல்லை.
Studio Camera (med. & Lg. Format) 10.000 டொலர்களுக்கு மேல் இல்லை.
Digital Camera 15.000 டொலர்களுக்கு மேல் இல்லை.

## கோலாலம்பூர் உலக சைவ மகாநாடு

பிரிவாக ஆசிய பசிபிக் அபிவிருத்தி மையத்தில் (APDC) நடைபெற்றன. 27ம் திகதி தமிழ் அரங்கில் நடைபெற்ற உரைகள் வருமாறு. திருநெறித் தமிழ், சிவவழிபாடு, சைவத்தின் மேன்மைக்கு ஈழத்து அறிஞர்கள் பங்கு, சைவத்தின் மேன்மைக்கு ஏற்பட்டுள்ள தடைகள், சைவத்தின் வினைக் கொள்கை, சமய தீட்சை. அன்று பின்னேரம் 5 மணியளவில் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகர்கள் சந்திப்பும் அதைத் தொடர்ந்து உலகச் சைவப் பேரவையின் முன்னாள் தலைவர் சிவநந்தி அடிகளாரின் நினைவு வழிபாடும் இடம்பெற்றது.

அடுத்தநாள் நிகழ்வில் சைவத்தின் உயிர்கொள்கை, எதிர்காலத் தலைமுறைக்குச் சைவம், ஆலய அமைப்பு, ஆன்மீகமும் உலகமயமாதலும், சிவயோக சித்தாந்தம், மேன்மைகொள் சைவநீதி, பலவகைச் சமயங்கள், வாழ்வின் குறிக்கோள் - ஒரு சைவப் பார்வை என்பன இடம்பெற்றன.

ஆங்கில அமர்வில் பல விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மண்டபத்தின் கீழ்மாடியில் சிறந்த ஒரு கண்காட்சியும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இதில் சிவபெருமான், சைவமதம், சைவசித்தாந்தம் கைலாசமலை, முருகக் கடவுள் பற்றி பல விபரங்கள் அழகாக படங்கள், அட்டவணைகள், ஓவியங்கள், சிலைகள், உருவங்கள் மூலம் விளக்கியிருந்தார்கள். அடுத்தநாள் சுற்றுலாவின் போது புதிய மலேசிய தலைநகருக்கும் (Putrajaya), பிரதம மந்திரியின் அலுவலகம், அங்குள்ள மிகப் பெரிய அழகான பள்ளிவாசல் ஆகிய இடங்களுக்கும், 272 படிகளைக் கொண்ட மலைக் கோவிலுக்கும் (Sri Subramaniam Temple Batu Caves) அழைத்துச் சென்றார்கள். கோலாலம்பூரில் பிரசித்தி பெற்ற இரட்டை உயர்ந்த கட்டிடம் (Twin towers) அருகாமையில் சென்று புகைப்படங்கள் எடுத்தோம்.

எமது பஸ் பயணத்தின் போது சமயப் பேச்சுகள், தேவாரங்கள், கேள்வி-பதில், ஒரு சிலரின் திருமுறை அனுபவங்கள் என பிரயாண முழு நேரமும் பக்தி மயமாக இருந்ததைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டிலிருந்து மாநாட்டிற்கு வந்தவர்களுக்கு ஆழ்ந்த சைவமத அறிவும் தமது நெற்றியில் எப்போதும் சிவசின்னமாகிய திருநீறும் அணிந்த வண்ணம் காணப்பட்டார்கள்.

மலேசிய தமிழ் மக்கள் சைவமதத்தை நன்கு போற்றிப் பேணி வருகிறார்கள் என்பதை தெளிவாகக் காண முடிந்தது. ஆனால் தாய்மொழி இளைய சந்ததியினரால் புறக்கணிக்கப்படுவது தான் கவலைக்கிடமானதாகும். கனடாவில் உள்ள நிலைமை தான் அங்கும் என்று சொல்லலாம். மலேசிய அரசாங்க பாடசாலைகளில் 6ம் வகுப்பிற்கு மேல் தமிழ் கற்பிக்கப்படுவதில்லை. தமிழைப் பயில்வதால் பிரயோசனம் இல்லை என்று பலர் கருதுகிறார்கள். அக்கறையான சில பெற்றோர்களே பிரத்தியேகமாக தமது பிள்ளைகளுக்கு தமது வீடுகளிலும் தமிழர்கள் மன்றங்களிலும் போதித்து வருகின்றார்கள். தாய்மொழி என்ற உணர்வையும் பற்றையும் பெற்றோரிடமும் குழந்தைகளிடமும் ஏற்படுத்த வேண்டியது அங்குள்ள சைவ மன்றங்களின் பொறுப்பு என்பதை நான் எடுத்துக் கூறினேன்.

மலேசியாவில் மலாய மொழி தான் அரசமொழி, அது தான் முதல் மொழி அந்த இன மக்களுக்கே எதிலும் முதலிடம். எங்கு சென்றாலும் தமிழர்களுக்கு இந்த அவல நிலைதான் என எண்ணத் தோன்றுகிறது. மாநாட்டின் இறுதிநாள் உலக சைவப் பேரவையின் நிர்வாக சபைக்கூட்டம் நடைபெற்றது. இதுவே சிவநந்தி அடிகளாரின் மறைவின் பின்பு நடைபெற்ற முதல் கூட்டமாகும். கூட்டத்தில் இருந்த அமைதியீனம் அவரின் பேரிழப்பை பளிச்சென எடுத்துக் காட்டியது. ஈற்றில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த திரு. சி. பற்குணராசா (சிவயோகானந்த அடிகளார்) பேரவையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். சிவநந்தி அடிகளின் இரு பிள்ளைகளும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அனைவரும் ஒற்றுமையாகச் செயல்பட்டு உலக சைவ பேரவை மூலம் பல நற்காரியங்களைச் சாதிக்கலாம் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.


உங்களது
சமூகக் காப்புறுதி எண்
(Social Insurance Number, ச கா எ SIN)
9ல்
ஆரம்பமாகிறதா




மற்றும் உங்களது ச கா எ அட்டையில் அதனுடைய காலக்கெடு முடிவு தேதி இல்லாது இருப்பின்,

எப்ரல் 3, 2004 க்கு முன்
உங்களுக்கு புதிய அட்டை தேவைப்படும்

மறு விண்ணப்பத்திற்கு நீங்கள் இதுபோல் செய்யலாம்

உங்கள் பிராந்திய கனடா மனித வள மையத்தை அனுகவும்.
அடையாள நிருபணம் மற்றும் வேலை பார்ப்பதற்கு வேண்டிய அதிகாரப் பத்திரம் ஆகியவற்றைக் கொண்டு வரவும்
(ஆவணங்கள் அசலாகவும் செல்லத்தக்கதாகவும் இருத்தல் அவசியம்).
மற்றும் விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்யவும்.

நீங்கள் அதே ச கா எ எண்ணை வைத்திருக்கலாம் ஆனால் உங்களது புதிய அட்டை நீங்கள் கனடாவில் தங்குவதற்கு வழங்கப்பட்ட அதிகாரப் பத்திரத்தில் உள்ள கடைசி நாளுக்கு ஒத்த காலக்கெடு முடிவு தேதியைக் கொண்டிருக்கும். இதற்குச் செலவழிக்கத் தேவையில்லை. நீங்கள் தபால் மூலமும் விண்ணப்பிக்கலாம்.

ச கா எ களின் நிர்வகித்தலைச் சீர்செய்தலுக்கான கனடிய அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

உங்கள் ச கா எ வைப் பாதுகாத்துக்
கொள்ளுங்கள்- அது தனிப்பட்டதாகும்!

மேலும் விவரங்களுக்கு தயவு செய்து அழைக்கவும்
1 800 206-7218 (ஆங்கிலம்), 1 800 808-6352 (பிரெஞ்சு)

அல்லது HRDC யின் வலைப் பக்கத்தைப்
www.hrdc-drhc.gc.ca/sin ல் பார்க்கவும்

அருகாமையிலுள்ள கனடா மனித வள மையத்தை கண்டுபிடிக்க,
அழையுங்கள் 1 800 O-Canada (1 800 622-6232)
தொ த 1 800 465-7735
சேவைகள் பிரெஞ்சு மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கும்.



Human Resources Development Canada
Développement des ressources humaines Canada
Canada

# Red Light Camera

## சிவப்பு விளக்கு 29

வீதி விதிகள் பற்றியும், அதனை மீறும் போது ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் இக் கட்டுரைத் தொடரில் வரும் பல விபரங்களையும் பலரும் வாசித்தும் கேட்டும் வருகின்றீர்கள். சாரதியுடைய வாகனமோட்டும் அனுமதிப் பத்திரம் "Driver's Licence" பற்றியும் அதில் உள்ள புள்ளிகள் எத்தனை என்பது பற்றியும், யார் யார் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்கக் கூடிய, அல்லது அதை பெற்றுக் கொள்ளும் தகுதியுடையவர்கள் என்றும் நீங்கள் தெரிந்து வைத்திருப்பினும், தெரிந்து கொண்டுள்ளவைகள் குழம்பிய நிலையில், அல்லது உங்களைக் குழப்பிய நிலையில் பல சந்தேகங்களையும் மனதில் கொண்டு வருவதும் சிலவேளைகளில் தவிர்க்க முடியாததொன்றாகி விடுகின்றது. எனவே தான் நான் தரும் பல தகவல்களை நீங்கள் தொடர்ந்து வாசிக்கும் போது சரியானவற்றை நீங்களும் உறுதி செய்யக்கூடிய இன்னுமொரு சந்தர்ப்பத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளுகின்றீர்கள்.

முதலில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறக்கூடிய வயது எது என்பதையும், ஏன் குறிப்பிட்ட வயது எல்லை சட்டமாக்கப்பட்டதென்பதையும் கவனிப்போம். மனித உரிமைகள் சட்ட வரையறைக-ளையும் மீறாதவண்ணம், எமக்குள்ள அடிப்படை உரிமைகளையும் கருத்தில் கொண்டு, சட்டமா அதிபர் திணைக்களம் ஒன்ராறியோவின் சட்டதிட்டங்களை கவன-மாக ஆராய்ந்த பின்னர் குறிப்பிட்ட ஆகக் குறைந்த வயதொன்றை "Adult Activities" ஆரம்பிக்கும் வயதாகக் குறித்து வைத்தது. இந்த வயது எல்லை பதினாறாகவும், தான் படிக்கும் பாடசாலையை விட்டு விலக முடிவெடுத்து விலகக் கூடிய வயதாகவும், முழுநேர வேலை செய்யக்கூடிய வயதெல்லையாகவும், அத்துடன் வாகனமோட்டும் "சாரதி அனுமதிப்பத்திரம்" பெறக்கூடிய வயதெல்லையாகவும் இன்னும் இதுபோன்ற சிலவேலைகளுக்கு தேவையான ஆகக் குறைந்த வயதெல்லையாகவும் "வயது 16" ஐச் சட்டமாக்கியுள்ளது. எனவே தான் பதினாறு வயதை அடைந்தவர்கள் வாகனமோட்டுதல் என்னும் பொறுப்பு மிக்க ஒரு சலுகையை பெறக்கூடிய தகுதி பெறுபவர்களாகவும், சட்டதிட்டங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய அறிவு பெற்றவர்களாகவும் ஒன்ராறியோவின் போக்குவரத்துத் திணைக்களம் பதினாறு வயதை சாரதி அனுமதிப்பத்திரம் பெறக்கூடிய ஆரம்ப வயதாக ஏற்றுக் கொண்டுள்ளது. இருப்பினும் இளவயதினருக்கும் முதிர்ச்சி அடைந்தவர்களுக்கும், விபத்துக்கள் ஏற்படுத்தப்பட்ட விகிதாசாரங்களில் உள்ள வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு "Graduated Licencing System" முறை 1994ம் ஆண்டில் அறிமுகமாக்கப்பட்டு சட்ட அமுலாக்கப்பட்டது. இவ்வாறு அமுலாக்கப்பட்ட "Graduated Licencing System" இன் பின்னர் வாகனம் ஓட்ட ஆரம்பிப்பவர்கள் இக்காலப் பகுதியில் விபத்துகளை ஏற்படுத்தும் விகிதாசாரமும் முன்னைய காலங்களை விட குறைவாகக் காணப்பட்டதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

மேற்கூறிய "படிமுறை" அமுலாக்கலில் புதிய சாரதிகள் தொடர்ந்து வரும் இரண்டு வருட கால எல்லை முடிவில் பூரண தகுதி பெற்ற முழு சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறக்கூடிய தகுதி பெற அவர்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றது. முதல்படியாக பன்னிரண்டு மாதகாலப் பகுதியில் புதிய சாரதிகள் ஆகக் குறைந்த நான்கு வருடமாவது முழுத் தகுதிபெற்ற சாரதியுடன் சேர்ந்து வாகனமோட்டும் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தகுதியுடைய அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை ஒன்றில் சாரதிகள் பயிற்சி பாடத்திட்டத்தைப் பயின்ற சான்றிதழை பெற்றிருந்தால், நான் மேற்கூறிய 12 மாத கால எல்லைப்பகுதி 8 மாதங்களாகக் குறைப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. அப்படியாயின் "படிமுறை" இரண்டுக்கு செல்வதற்கு உள்ள காலப் பகுதியான மாதங்கள் பன்னிரண்டில் 4 மாதங்கள் கழிவு வழங்கப்படுகின்றது. எனவே "படிமுறை இரண்டு" பகுதிக்குச் செல்வதற்கு இன்னுமொரு "Road test" இற்கு செல்ல வேண்டிய நிலை உண்டு. அதற்கு முன்னதாக இக் காலப் பகுதியில் உள்ள சாரதிகளுடைய நிலை பற்றி . அவதானிப்போம்.

படிமுறை ஒன்று "Level one" நிலையில் உள்ள புதிய சாரதி அனுமதிப்பத்திரம் உடைய ஒருவருக்கு மொத்தம் 9 (Demerit points) புள்ளிகள் பெறக்கூடிய நிலை வழங்கப்பட்டுள்ளது. இக் காலப் பகுதியில் ஒன்பது புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலாகவோ ஒரு புதிய சாரதி அல்லது "Level one" எனப்படும் G - 1 Licence சாரதி பெற்றுக் கொண்டால் அவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் உடனேயே போக்குவரத்து திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்படும். 9 புள்ளிகளை பெற்றவர்களுக்கு அவர்கள் G - 4 சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருந்தால் தொடர்ந்து 60 நாட்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் தடுத்து வைக்கப்படும். அறுபது நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு மீண்டும் சாரதி அனுமதிப்பத்திரத்தை இணைத்துக் கொள்ளும் போது, உங்களுக்கு உரிய சேர்த்துக் கொள்ளக் கூடிய புள்ளிகளின் தொகை நான்காக மட்டுமே குறைக்கப்பட்டு வழங்கப்படும். இவ்வாறு உள்ள ஒரு சாரதிக்கு இன்னும் ஒன்று இரண்டு புள்ளிகளை சேர்த்துக் கொள்ளும் நிலை ஏற்படின் பின்னர் அவர்கள் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு நேர்காணல் ஒன்றுக்குச் செல்லக்கூடிய நிலை ஏற்படுகின்றது. அங்கு நேர்காணலுக்குச் சென்றால் குறிப்பிட்ட சாரதி தன்னுடைய சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்க ஏன் அந்த சாரதிக்கு இன்னும் அனுமதி தர வேண்டும்? என்னும் போக்குவரத்துத் திணைக்களத்தின் "நேர்காணல்" அதிகாரிகளுக்கு விளக்கமான பதில் தரும் நிர்ப்பந்த நிலைக்கு குறிப்பிடப்பட்ட சாரதி தள்ளப்பட்டு விடுகின்றார்.

ஒரு சாரதி தான் பெற்றுக் கொண்ட புள்ளிகள், அவருடைய சாரதி அனுமதிப்பத்திர பதிவேட்டில், இவ்வாறு புள்ளிகள் பெற்ற நாளில் இருந்து தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு வைத்திருக்கின்றது. ஆனால் உங்களுடைய காப்புறுதி நிறுவனங்களோ இவ்வாறு பெற்றுக் கொண்ட புள்ளிகள் விபரங்கள் அவை பெறப்பட்ட காலப் பகுதியில் இருந்து தொடர்ந்து 3 வருடங்கள் தங்கள் பதிவேட்டில் வைத்திருக்கின்றன. இவ்வாறு காப்புறுதி நிறுவனங்கள் தாங்கள் மாதா மாதம் வசூலித்து வரும் கட்டணங்களின் தொகைகளை பல மடங்காக அதிகரித்து விடுகின்றன.

புதிய சாரதிகளோ அல்லது அனுபவம் மிக்கவர்கள் கூட Trafffic Ticket பெற்ற பின்னர் அதற்குரிய குற்றப் பணத்தை உரிய காலப் பகுதியில் செலுத்தி சில சிரமங்களில் இருந்து விடுபட எத்தனிக்கின்றனர். ஆனால் வரக்கூடிய விளைவுகளில், அதிலும் பலருக்கும் தெரிந்தவற்றில் சிலவற்றை மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். வாகனத்துக்காக மாதமொரு முறை நீங்கள் இன்சூரன்ஸ் கொம்பனிக்குச் செலுத்தி வரும் கட்டுப்பணத்தின் தொகை கணிசமான தொகை அதிகரிப்பது மட்டுமன்றி தொடர்ந்து வாகனம் செலுத்தும் உரிமையைக் கூட பலர் இழந்துள்ளார்கள்.

எங்களுடைய இணைய தள முகவரி www.trafficmasters.ca என்னும் பகுதிக்குச் செல்லும் போது இது போன்ற இன்னும் பல நன்மை தரும் தகவல்களை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

நேரடியாக எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் 416-757-7707 என்ற தொலைபேசிக்கு அழையுங்கள்.

**பீற்றர் ஜோசப்**

# நவம்பர் 10ஆம் திகதி உங்கள் ஆதரவை இவர்களுக்கு அளியுங்கள்!
# இளம் தலைமுறைக்குப் பலம்! மூத்த பரம்பரைக்குப் பாலம்!



# R & S Auto Sales

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது
எங்கள் விசேட திறன்!

28 ஆண்டுகள் அனுபவம்!



RADHA

HONDA
TOYOTA
GM-MINI VANS




4362 Sheppard Ave. East
at Brimley

Tel: 416 412 3838


## புளூ காய்ச்சலை முறியடிப்போம்!

உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். தடுப்பூசி நிலைய முகவரிகளுக்கும், மேலதிக விபரங்களுக்கும் (1-866-358-6968 என்னும் இலக்கத்தையோ அல்லது www.toronto.ca/health என்னும் இணைய தளத்தையோ தொடர்பு கொள்ளவும்.

## ஆரம்ப கணிதம்

நோக்கில் உகந்ததென்றே கூற வேண்டும். பாடசாலை வகுப்புகளில் மாணவர்கள் பயன்படுத்தும் வரைச் சட்டங்களை (Rulers) நோக்குமிடத்து அநேகமாக அடிச்சட்டங்கள் அல்லது அரை அடிச்சட்டங்களே புழக்கத்தில் உள்ளன. அவற்றில் மெத்திரிக் அளவையும், பிரித்தானிய அளவையும் குறிக்கப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். எனவே தான் இவ்விரு அளவைகள் கொண்ட கணிப்புக்களை ஒப்பீட்டு ரீதியில் கற்பிப்பது உகந்ததெனக் கருதப்படுகின்றது.

எண்களின் பல்வேறு வகைப்பட்ட கூட்டல்களையும், கழித்தல்களையும் தொடர்ந்து கணியங்களின் அலகு மாற்றங்களையும், கூட்டல் கழித்தல்களையும் சொல்லிக் கொடுக்க வேண்டும். இதைப் பெற்றோர்கள் செய்யலாம். இதற்கு அந்தந்த தரங்களுக்குரிய பயிற்சி நூல்களைப் பயன்படுத்தலாம். பெற்றோர்கள் பயன்படுத்தக் கூடிய பயிற்சி நூல்கள் சில:

1. Math Smart - Problem Solving
2. Quest 2000 - Practice and home work book
3. Spectrum Math

எண்களினதும் கணியங்களினதும் கூட்டல் கழித்தல்களைத் தொடர்ந்து, கூட்டல் கழித்தல்களை அடிப்படையாகக் கொண்ட உத்திக் கணக்குகளைச் சொல்லிக் கொடுக்கலாம். உத்திக்கணக்குகளைப் பயிலும் பொழுது மாணவர்கள் வாசித்தல், எழுதுதல், உற்றுக் கேட்டல், பேசுதல், கிரகித்தல் ஆகிய மொழித் திறன்களையும், கணக்கைச் செய்வது எப்படி, அதாவது கூட்டியோ, கழித்தோ செய்வது எனும் செயற்பாடுகளையும் (Operational skill) விருத்தி செய்கின்றார்கள். கல்வி அடைவுகளின் மட்டங்களைப் (Levels of educational achievements) பொறுத்தவரையில் பிரயோகமட்டத்தை உத்திக் கணக்குகளைச் செய்வதன் மூலம் அடைகின்றார்கள். கல்வி அடைவுகளின் மட்டங்களில் இது மூன்றாவதாகும். முதலாம் மட்டம் ஞாபகமீட்டல், இரண்டாவது மட்டம் கிரகித்தல் ஆகும்.


**Allianz**

Allianz Education Funds Inc.

Education Savings Plans

Heritage Scholarship Trust Plan
Distributed by Allianz Education Funds Inc.

**RESP SAVINGS PLAN**

கல்விச்சேமிப்புத் திட்டம்

- You are eligible to apply for an Education Savings Grant of up to $7,200 per child.
- Your savings are more safe and secure.
- You can start with a small amount.
- It's a more flexible plan.

**Education is a great gift for your future generations**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு.



S. Ganthiy
B.A. (Sri-Lanka)
Enrollment Officer

ON THE WEB: http://ganthiy.cjb.net
E-MAIL: ganthiy@rogers.com

416-955-9303
416-841-1866

## சாயி பஜனைகள்

### ஸ்காபரோ

ஸ்காபரோ சாயி சமித்தியினரால் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஸ்காபரோ வுபர்ன் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரை சாயி பஜனை நடத்தப்பட்டு வருகின்றது. இதே நாட்களில் கல்வி வட்டத்தினரின் வகுப்புகள் பிற்பகல் 5:15 மணி முதல் 5:45 மணி வரை நடைபெறும். பாலவிஹாஸ் வகுப்புகள் 5 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை நடைபெறும்.

### வெலஸ்லி

ரொறன்ரோ பார்லிமென்ட் வீதியில் அமைந்துள்ள டொன்வலி எக்ஸ்ரே கட்டிடத்தினுள் தற்போது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 6 மணி முதல் ஏழு மணி வரையும் சாயி பஜனை நடைபெறுகின்றது. விபரங்களுக்கு (416) 924-6287 இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

### மிஸிஸாகா

மிஸிஸாகா சாயி சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை இரவு எட்டு மணி முதல் ஒன்பதரை மணி வரை பஜனையும், தியான வழிபாடும் மிஸிஸாகாவில் 1447 அலக்ஸான்ட்ரா அவினியுவில் அமைந்துள்ள ஸ்ரீசத்ய சாயி பாபா நிலையத்தில் நடைபெறுகின்றது. சிறுவர்களுக்கு பாலவிகாஷ் சமயபாடப் போதனைகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் Erindal campusல் சபையினரால் நடத்தப்படுகின்றது. விபரங்களுக்கு (905) 274-8886 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### லான்ட்ஸ்ரவுண்

லான்ட்ஸ்ரவுண் ஸ்ரீ சத்ய சாயி நிலையத்தில் பிரதி வியாழன் மாலை 7:30 மணி தொடக்கம் 8:30 மணி வரை பஜனைகள் நடைபெறும். அதேதினம் மாலை 6:45 மணி முதல் 7:25 வரை கல்வி வட்டமும் பிரதி செவ்வாய்க்கிழமை மாலை ஆறு மணி தொடக்கம் ஏழு மணி வரை பாலவிகாஷ் எனப்படும் சிறுவர் சமய வகுப்பும் நடைபெறும். லான்ட்ஸ்ரவுண் தமிழர் கூட்டுறவு இல்ல 3ம் மாடி மண்டபத்தில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### டொன்மில்ஸ்

டொன்மில்ஸ் சாயி சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை பிளெமிங்டன் பார்க் (29 St.Dennis Drive)

## சாயி பஜனைகள்

நூலக மண்டபத்தில் காலை 9:15 மணி முதல் 10:30 மணி வரையும் சிறுவர்களுக்கான (நான்கு வயது முதல் பதினாறு வயது வரை) பாலவிகாஷ் வகுப்புகளும், காலை பதினொரு மணி முதல் 12:30 மணி வரையும் சாயி பஜனையும் நடத்தப்படுகின்றது விபரங்களுக்கு 416-750-0128 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### எற்றோபிக்கோ

எற்றோபிக்கோவில் 2400 Finch West வீதியில் அமைந்துள்ள திருச்செந்தூர் முருகன் ஆலய மண்டபத்தில் சாயி பஜனை பிரதி வெள்ளி தோறும் பிற்பகல் 7:30 மணி முதல் 9:00 மணி வரை நடைபெறுகின்றது. விபரங்களுக்கு 416-748-7254 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### மார்க்கம்-எக்லின்டன்

மார்க்கம்-எக்லின்டன் சாயி சேவாவினரால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பிற்பகல் 7.45 மணிமுதல் 8.45 மணிவரை Cedar Driveல் அமைந்துள்ள Cedar Drive Junior Public பாடசாலையின் ஜிம் அரங்கில் நடைபெறுகின்றது. விபரங்களுக்கு 416-267-1246 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

### ரொறன்ரோ கிழக்கு

ரொறன்ரோ கிழக்கு சாயி சமிதியினரால் பிரதி ஞாயிறு பிற்பகல் 6 மணி முதல் 7.30 வரை பஜனையும், தியான வழிபாடும் 20 Canadian Road இல் அமைந்துள்ள Ellesmere Community Recreation Centre மண்டபத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. சிறுவர்களுக்கான பால விகாஸ் போதனா வகுப்புகளும் ஞாயிறு மாலை 4.45 முதல் 6 மணி வரை நடத்தப்படுகின்றது.

விபரங்களுக்கு - 905 944 1611

### ஸ்காபரோ
### பார்மஸி - பிஞ்ச்

ஸ்காபரோ பிறைடல் ரவுன் சாயி சமித்தியினரால் பிரதி ஞாயிறு தோறும் பிற்பகல் 5.00 - 6.15 வரை பாலவிகாஸ் வகுப்புகளும் சாயி இளைஞர்களுக்கான வகுப்புகளும், 5.45 - 6.15 வரை கல்வி வட்ட வகுப்புகளும், 6.30 - 7.30 வரை சாயி பஜனையும் தியான வழிபாடும் 3150 பார்மஸி அவெனியுவில் அமைந்துள்ள Ephipany of our Lord கத்தோலிக்க பாடசாலையின் ஜிம் அரங்கினில் நடத்தப்படுகின்றது. மேலதிக தொடர்புகளுக்கு (416) 431-3279 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.




சபேசன்ஸ்

விருது பெற்ற
தொழிற்றுறை
நிபுணர்

வீடு திருத்தம்
மற்றும்
நிலக் கம்பளம்
பொருத்தும்
வேலைகளில்
தன்னிகரற்றவர்!

எந்தப் பணியையும்
குறித்த நேரத்துள்
செய்து முடிப்பதில்
வல்லுனர்!

ஒருமுறை
தொடர்பு கொண்டால்
உண்மை தெரியும்!
பலன் புரியும்!

416 605 1990
416 605 1990

24ம் பக்கத் தொடர்ச்சி

நினைத்தபடி உலா வரலாம். "இரவிலே கறுத்த நாயுடன் ஊரிலே அர்த்த இராத்திரியில் நடமாடுகிறார் பார்த்தோம்" என்று சில முதியவர்கள் சொல்லக் கேள்வி. வயிரவர் தன் கடமையைச் செவ்வனே செய்கிறமையால் அந்த நன்றியைக் காட்டும் முகமாக ஆடி மாத முதல் செவ்வாய் அவருக்குப் பெரிய பொங்கலும் படையலும் உண்டு.

புளியடி வயிரவருக்குப் பெரிய மடை போட்டுப் பொங்கல் இரவிரவாக நடக்கும். எங்கள் தந்தையின் பரம்பரைச் சொத்து அந்த வயிரவர். எனவே என் தந்தைக்குத் தான் நாசக பானை கட்டும் உரிமை, அதாவது முதல் பொங்கல் பானை வைக்கும் உரிமை. பானையில் தான் பொங்குவார்கள். பொங்கல் என்றால் அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னிருந்தே ஆயத்தங்கள் நடக்கும். பலகாரச் சூட்டுக்கு அம்மா ஆயத்தங்களைச் செய்ய அப்பு பலாப்பழம், வாழைக்குலை என சேகரிக்க ஆரம்பித்து விடுவார். வாழைக்குலைகளில் இதரை, கப்பல், கதலி என எல்லா வகையும் இருக்கும். காய்க் குலையைப் பழமாக்குவதற்காக இரண்டு நாட்களாவது மண்ணின் கீழே குழியுள் புதைத்து வைத்து காலையும் மாலையும் புகை அடிப்பார்கள். பலாக்காய் பழமாகாது என எண்ணினால் பன்னை மரக் கட்டை ஒன்றினை அதன் காம்பின் உள்ளே அடித்துச் செலுத்துவார்கள். வடை, முறுக்கு, பால் உறொட்டி தான் பலகாரங்கள். செவ்வாய் காலையே உறவினர் பலர் பலகாரச் சூட்டிற்காக வீட்டில் வந்து குவிந்து விடுவார்கள். உறொட்டி புடைத்து பந்து போல வரும். மிகக் கவனமாகச் செய்வார்கள், கதைத்தால் புடைக்காமல் தட்டையாகி விடுமாம். எனவே அப்போது மாத்திரம் கப்சிப். பின்னர் ஊர்வம்பும் பலகாரத்துடன் சேர்ந்தே சுடப்படும். பெரிய பெரிய கடகங்களிலே பலகாரம் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மடை பரப்பப்படும். முதலில் உறொட்டியைக் குவித்து அதன் மேல் முறுக்கினைப் பரப்பி, பனம் ஈர்க்கிலே கோர்க்கப்பட்ட வடை மாலைகள் எல்லாப் பக்கங்களும் வைக்கப்பட்டிருக்கும். மடை மலைபோல காட்சி தரும். நானாகக் கீறப்பட்ட பலாப்பழமும், சீப்புச் சீப்பாக

# எனது குக்கிராமம்

வெட்டி எடுக்கப்பட்ட வாழைப் பழமும் மடையின் நாற்புறங்களிலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

அந்த ஆலமரம் மூன்று பக்கத்துக் காணிகளுள்ளும் விழுதுகளை நிலத்தில் ஊன்றி அம் மூன்று காணிகளிலும் உரிமை கொண்டாடிக் கம்பீரமாய் வியாபித்து நிற்கிறது. விழுதுகள் நிலத்தில் பதித்துக் கொள்வதால் அவற்றினை ஆதார வேர்கள் (prop roots) என தாவரவியல் கற்றவர்கள் அழைப்பார்கள். வேறெங்குமே இத்தனை பெரிய ஆலமரம் ஒன்றை நான் கண்டதில்லை. மேற்குப் புறத்தில் ஒழுங்கை. அந்த ஒழுங்கைக்கு மேலாக வளர்ந்தே மேற்குப் புறக்காணியுள் விழுது பதித்துள்ளது. ஆலம் குழை ஆடுகளுக்கு நல்ல தீனி. ஆனால் அந்த உயரத்தில் ஏறி வெட்டுவது யார். எனவே, பழுத்தல் இலை பொறுக்குவார்கள். ஆலம் சுள்ளி அப்பம் சுட உதவும். கை கால் முறிவு நோவு ஏற்பட்டால் பத்துப் போடுவதற்கு ஆலம் பாலே மிகவும் உகந்தது. முறிந்த இடத்தை துணியினால் நன்கு சுற்றிவிட்டு ஆலமரத்தில் குத்தி அதன் பால் எடுத்து இந்தத் துணிக்கு மேல் பூசுவார்கள். அது காய்ந்த பொழுது வன்மையாக ஸ்திரமாக இருக்கும். Plaster of Parris ஆங்கில வைத்தியத்தில் செய்வதை ஆலம் பால் நாட்டு வைத்தியத்தில் செய்கிறது.

புதிய விழுதுகள் முளைத்து வருகின்றன. ஆனால் அவை நிலத்தில் பதிய விடுவாரில்லை. விழுதினைக் கட்டி ஊஞ்சல் ஆடுவார்கள். "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்பது பழமொழி. எனவே விழுதுகளை பல் துலக்குவதற்காக நறுக்கிக் கொண்டும் போவார்கள்.

இந்த ஆலமரம் காய்க்கின்ற காலம் கலகலவென்ற பல்வேறு வகைக் குருவிகளின் குரலோசை காலையில் காதுகளை அடைக்கச் செய்துவிடும். ஆனாலும் அதில் ஒரு இன்பம் இருக்கவே செய்யும். வெய்யில் ஏற அவைகள் எங்கு சென்று விடுகின்றனவோ தெரியாது மறுநாட் காலை மீண்டும் அவற்றின் ரீங்காரம். சங்க காலத்திலே கடவுள் ஆலமரத்தில் வசிப்பதாகக் கருதினார்களாம். எனவே கடவுளாலம் என்றார்கள். பெரும்பதுமனார் என்னும் புலவர் "தெய்வம் வாழ்கின்ற ஆலமரத்தினது பெரிய கிளைகளில் உள்ள பல பழங்களை நேற்று உண்டோம் என எண்ணாது மேலும் அவ்விடத்துக்குப் பறவையினம் போகும்" என்கிறார்.

கடவுள் ஆலத்து தடவுச்சினைப் பல்பழம்
நெருநல் உண்டனம் என்னாது பின்னும்
செலவு ஆனாவே கலிகொள் புள்ளினம்....
(புறநானூறு 199)

இதே காலத்தில் நமது சின்னப்பா வளவின் முன் புறத்தேயுள்ள பெரிய இலுப்பை மரம் பழுத்துச் சொரியும். ஆலமரத்தில் காலையில் குருவிகளின் கலகலப்பென்றால் இரவு முழுக்க இலுப்பை மரத்தில் வெளவால்களின் குரலோசை. நிலாக் காலங்களிலே பெரிய சிறகுகளை அடித்தபடி வெளவால்கள் பறப்பதை பார்ப்பதே அழகு. இலுப்பை மரத்துக்கு முன்னே இரண்டு உயர்ந்த தென்னை மரங்களுக்கு இடையே இந்த வெளவால்களைப் பிடிப்பதற்காக வெளவால்கொடி கட்டியிருப்பார்கள். இந்தக் கொடியிலே ஆறு அங்குல இடைவெளியில் முட்களையுடைய நீண்ட கொடிக்கள் தொங்கும். இரவிலே பறக்கும் வெளவால்களின் சிறகுகள் இந்த முட்களில் மாட்டிக் கொள்ளும். உண்மையில் இலுப்பைப் பூக்காலத்திலே வெண்முத்துகள் போன்ற மென்மையான பூக்கள் நிலமெல்லாம் நிரம்பிக் காணப்படுவது கொள்ளை அழகு. பூக்கள் நல்ல இனிப்பானவை. சிலர் பூக்களைச் சேகரித்துக் காயவைத்து இடித்து உண்பார்கள்.

இது போன்றே வேப்பம் பூக்காலத்திலேயும் நிலமெல்லாம் சிறிய பூக்கள் விழுந்து வெள்ளைக் கம்பளம் போலக் காட்சி தரும். அப் பூக்களைச் சேர்த்து வடகம் செய்வார்கள் கிராமத்தவர்கள்.

முடியவில்லை....
அடுத்த இதழிலும் வரும்




புதிய பாவித்த வாகனங்களை உத்தரவாதத்துடன் குறைந்த வட்டி வீதத்தில் பெற்று தொடர்ந்தும் நம்பிக்கையான பாரமரிப்பு சேவைக்கு நாடுங்கள ரட்ணம் கணேஷ். புதிய வாகனங்களை வாங்குபவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் வித்தியாசமான பரிசுப்பொருட்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு எனது தொடர்வலையை (website) நாடவும்.

**Ratnam Ganesh**

4121 Kingston Road Scarborough, Ontario M1E 2M3
Cell: 416 937 5985
Bus: 416 284 1631 Fax: 416 284 1304

ரட்ணம் கணேஷ்

புதிய இடமாற்றத்தை அவதானிக்கவும் Guildwood Via Station க்கு அருகாமையில்
www.ratnamautosales.com ratnam@ratnamautosales.com

Johnston
CHEVROLET OLDSMOBILE





# தீராத நோய்களுக்கு ராசமூலிகையின் அற்புதங்கள்



## Nagil NS®



### A FOOD SUPPLEMENT

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். தீராத நோய்களினால் துன்பப்படுகின்றீர்களா? மீண்டும் தமிழகத்திலிருந்து மூலிகை நிபுணர் அஷ்ரப் அலி அவர்கள் ரொரன்ரோ வருகை தந்துள்ளார்.

சர்க்கரை வியாதியினால் துயரப்படுகிறீர்களா? ஆஸ்த்துமாவால் அவதிப்படுகிறீர்களா? இரத்தக்கொதிப்பினால் குழப்பமடைகிறீர்களா? கை, கால், இடுப்பு, தோள்மூட்டு வலிகளால் அல்லல்படுகிறீர்களா? இல்லற வாழ்வில் பூரண திருப்தியற்ற பிரச்சனைகளை எதிர்நோக்குகிறீர்களா?

இவை அனைத்திற்கும் தீர்வு காண *Nagil NS* மூலிகை மருந்தின் மூலம் 60 நாட்களில் சுகத்தின் பலனை அடைவீர்கள்.




**ஒருமுறை பாவித்து உண்மையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!**

திருவாளர் அஷ்ரப் அலி அவர்கள் சேவை நோக்கம் கொண்ட ஒரு மாமனிதர். கடந்த எட்டு ஆண்டுகளாக இம் மூலிகையின் பாவனையால் குணமடைந்த மக்களின் நேரடி சாட்சியங்களை பக்கபலமாக கொண்டுள்ளார்.

இவ் அரிய மருந்து கனடா வாழ் புலம் பெயர்ந்த எம்மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக சமுதாய சேவை நிறுவனமுடாக **(Universal Community Help)** விநியோகம் செய்யப்படுகின்றது.

## தொடர்புகளுக்கு

**416-744-9568 / 416-266-HELP (4357) / 416-744-HELP (4357)**

**416-742-EVER(3837) / 416-438-5876 / 416-919-4965**

**Universal Community Help**

**2400 Finch Avenue, West #10 (Weston / Finch)**

**2800 Eglington Avenue #18 (McCowan / Eglinton)**

Marketed By: Greenish (Canada) Trades

#62, Shoredale Drive, Scarborough, ON M1G 3S9 Tel: 438-5876 Fax: 416-438-2283 E-Mail: greenish@canada.com

COME! LEARN! ENTER THE UNIVERSITY!

# OSSD சான்றிதழ் வழங்கும்

ஒன்ராறியோ அரசின் அங்கீகாரம் பெற்ற முதல் தமிழர் தாபனம்

# ONTARIO INTERNATIONAL INSTITUTE

(அங்கீகார இல 666378)

**Credit course வகுப்புகளை 2390 Eglinton Avenue East, #204ல் பகல்நேர, இரவுநேர (Night School)** வகுப்புகளாக நடாத்துகின்றது. பரதநாட்டியத்திற்கு வழங்கும் கற்கை நெறிகள் இடம்பெறுகின்றன.

Under the Principal ship of



Tim Gervais B.A (Honors) M.Ed

தொடர்புகட்கு

## ஒன்ராறியோ இன்ரநஸ்னல் இன்ஸ்ரிரியூற்



Call Now! **416-701-1763 | 905-471-3084**

கடந்த 10 ஆண்டுகளாகக் கல்விபுகட்டுவதில் சாதனை புரியும்

## வீ.வீ ரியூரறிங் சென்ரர்

தன் வகுப்புகளை

- Scarborough
  1940 Ellesmere Road
  (Bellamy&Ellesmere)
- Markham
  28 James Edward Drive
  (Middlefield & Elison)
- Mississauga
  1808 Drew Road
  (Drew Rd & Dixie Rd)

ஆகிய இடங்களில் ஒன்றாறியோவில் கல்வி புகட்டுவதற்கான தகமையுடைய ஆசிரியர் குழுவால் புதிய ஒன்றாறியோ அரசின் பாடத்திட்டத்திற்கமைய நடாத்துகின்றது.

- சகல கணிதப் (Mathematics Competition)போட்டிகளுக்கான வகுப்புகள் நவம்பரில் ஆரம்பமாகின்றன.
- தரம் 3ம், 6ற்கான மாகாணப்பரீட்சைக்கான (EQAO) வகுப்புகள் விசேட கற்கை நெறிகளாக இடம்பெறுகின்றன.

# VV TUTORING CENTRE

Call Now! **416-701-1763 | 905-471-3084**

Dr. Nirmala SIVA
Dr. Chelliah YOGESWARAN
&
Associates

# DENTAL OFFICE

ஸ்காபரோ McNicoll & Middlefield சந்திப்பில்
மார்க்கம் நகர மக்களுக்கும் வசதியாக
அமைந்துள்ள பல் வைத்திய நிலையம்

Dr. Nirmala **Siva**
Dr Chelliah **Yogeswaran**

Associate
Dr. Ashok Babu Raamya

3300 McNicoll Avenue, Suite: 202
(McNicoll & Middlefield)
Scarborough, ON. M1V 5J6

**Tel: 416 299 1868**



## Goreway Dental Centre

மோல்ரன் மிஸிஸாகாவில் Goreway & Derry சந்திப்பில்
பிறாம்ரன், றெக்ஸ்டேல், எற்றோபிக்கோ, டவுண்ஸ்வியு
நகரங்களுக்கு வசதியாகவுள்ள பல் வைத்திய நிலையம்.

7125 Goreway Drive, Suite: 206
(Goreway & Derry)
Mississauga (Malton), ON. L4T 4H3

**Tel: 905 673 7874**

# P. Kayilasanathan

B.A (CEY) LLB (CEY)
BARRISTER & SOLICITOR



குற்றவியல்
வழக்குகள்,
அகதிநிலை
விசாரணைகள்,
மனிதாபிமான
விண்ணப்பங்கள்,
வீடு, வியாபார
ஸ்தாபனங்கள்
வாங்குதல் - விற்றல்,
குடும்ப வழக்குகள்,
வாகன விபத்து
நஷ்டஈடு கோருதல்.

**பொ. கயிலாசநாதன்**
கனடிய பாரிஸ்டர்

2401 Eglinton Av. East, Suite # 302
(Eglinton/Kennedy)
Scarborough, ON
M1R 2M5

Tel.: 416-752 9561
Fax: 416-752 7262

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

905 501-0011



905 501-0011

**திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகள் சேவைக்கும், திருமணத்திற்குத் தேவையான அனைத்து தேவைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்**

மண்டபம், முத்துமணவறை, மண்டப அலங்காரம், பூமாலை, சடைநாகம்,
தலைப்பாகை, தலைநகை, பூஜைப் பொருட்கள், சுத்த சைவ உணவு
ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில் பெற எங்களை நாடுங்கள்.

வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய மரீனா மண்டபம் உட்பட
திருமண மண்டபங்களையும் நாங்களே ஒழுங்குசெய்து தருகின்றோம்.

இந்துமத குரு, திருமணப் பதிவு அதிகாரி

**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்**

(Hindu Priest & Registrar of Marriages)

**5556 Whistler Crescent, Mississauga, Ontario.**

**தொலைபேசி: 905-501-0011**

## கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரதமும் புனித மாலை அணியும் வைபவமும்

சபரிமலையை அடுத்த புனிதத்துவம் கொண்ட 18 படிகளையுடைய ஐயப்பன் ஆலயம் வட அமெரிக்காவில் ஐயப்பனை மூலமூர்த்தியாக கொண்ட ஒரே ஆலயம் ஸ்காபரோ 635 மிடில்பீல்ட் வீதி அமைந்துள்ள கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயமாகும். ஐயப்பனின் புனித விரதமான மண்டல பூசை, மாலை அணியும் வைபவம் 17.11.2003 திங்கள் கிழமை நிகழத் திருவருள் கூடியுள்ளது. அன்று காலை 9:00 மணிக்கு கணபதி ஹோமம், விரதாதிகளுக்கான துளசி மாலைக்கு அபிஷேகம், மாலை 5:00 மணிக்கு சாஸ்தா ஹோமம் தொடர்ந்து துளசி மாலை அணியும் வைபவம் ஆரம்பமாகும். பின்னர் ஐயப்பப் பெருமாள் சரணகோசத்துடன் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். மண்டல பூசை காலங்களில் பகல் இரவு திருவிழாக்கள் நடைபெற்று. இருவேளையிலும் சுவாமி வீதி உலா புறப்பாடு இடம்பெறும். புனித மாலை அணியவுள்ள அடியார்கள் தங்கள் பெயர்களை ஆலய காரியாலயத்தில் பதிந்து உரிய விளக்கங்களையும் பெற்று விரதத்தினை மேற்கொண்டு கலியுகவரதனின் அருளைப் பெறுமாறும், சபரிமலை செல்பவர்களும் பதிவு செய்து கொள்ளுமாறு அன்போடு அனைவரையும் அறங்காவலர் சபையினர் வேண்டுகின்றனர். மேலதிக தொடர்புகளுக்கு 416-321-6104.

### பாபரா ஹோலிடமிருந்து......

ரொறன்ரோ மேயராக நான் பணியாற்றிய காலங்களில் இருமட்ட அரசாங்கங்களுடனும், பலதரப்பட்ட அரசியல் கொள்கைகளை ஆதரிக்கும் அரசியல் தலைவர்களுடனும் நட்புறவுடன் கடமையாற்றியுள்ளேன். எனது மாநகர காரியாலயத்தில் தலைமை நிர்வாகியாகக் கடமையாற்றி, பின்னர் எனது மத்திய-ரொறன்ரோ-ரோஸ்டேல் தொகுதியில் இருந்து சட்டசபை உறுப்பினராகத் தெரிவாகியுள்ள ஜோர்ஜ் சிமிதமன் அவர்களும் வேறுபல லிபரல் வேட்பாளர்களும் ரொறன்ரோவில் இருந்து தெரிவு செய்யப்பட்டு உங்களுடைய அரசாங்கத்தில் அங்கமாக விளங்குகின்றனர்.

ரொறன்ரோவைத் தரமுயர்த்தும் பணியில் இவர்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளேன். நான் மேயராகக் கடமையாற்றிய மூன்று வருடங்களில் இவர்களுடன் இணைந்து ரொறன்ரோவிற்கு நாம் எவ்வளவோ நன்மைகளைச் செய்துள்ளோம். அந்தக் குறுகிய காலத்தில் பிளவுபட்டிருந்த மாநகரசபையை ஒற்றுமைப்படுத்தி சுகாதாரச் சேவை, பாதுகாப்பு போன்ற பல அத்தியாவசிய சேவைகளைத் திறம்படச் செய்ததோடு, நிதி நிர்வாகத்தை திறம்படச் செய்து துண்டு விழாத வரவுசெலவுத் திட்டத்தையும் சமர்ப்பித்துள்ளேன்.

அந்த மூன்றாண்டு காலத்தில் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்தது. வழங்கப்படும் கட்டிட அனுமதிப் பத்திரங்களின் தொகை அதிகரித்தது. குற்றச் செயல்கள் குறைந்தன. அப்படியிருந்தும் வரிகள் எதுவும் அதிகரிக்கப்படவில்லை. இந்தக் காலப் பகுதியில் கலை, கலாசார சமூகம் வளர்ச்சி கண்டது. அதைப் போலவே விருந்தோம்பல் துறையும் வளர்ச்சி காணப்பட்டது. இதே காலகட்டத்தில் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கும் உலகத்திலேயே மிகச் சிறந்த நகரம் என ரொறன்ரோவிற்கு Fortune சஞ்சிகையால் புகழாரம் சூட்டப்பட்டது.

இவை யாவும் அப்போது நடைபெற்றவை. ஆனால் இப்போதுள்ள நிலையே வேறு.

எமது நகரத்தின் தேவைகளை ஏற்றுக் கொண்டு வாகன எரிபொருள் வரியில் இருந்து இரண்டு சதங்கள் ரொறன்ரோ பொதுப் போக்குவரத்து அபிவிருத்திக்கு வழங்கப் போவதாக தாங்கள் அறிவித்தது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நாட்டின் பிரதம மந்திரியாகப் பதவியேற்க இருக்கும் திரு.போல் மாட்டின் அவர்களும் எரிபொருள் வரியில் இருந்து ஒரு சிறிய பகுதி நாட்டின் மாநகரங்களுக்கு வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

இப்படியான அணுகுமுறை நாட்டின் சகல மட்டங்களிலும் இயங்கி வருகின்ற நிர்வாகங்களுக்கிடையே ஆக்கபூர்வமான நல்லுறவுகளை ஏற்படுத்துவது மாத்திரமல்லாது, அதனால் மக்களும் நிச்சயமாக நன்மையடைவார்கள் என்பதும் உறுதி. ரொறன்ரோவிற்கு நீங்கள் தேவை. அதைப் போலவே ஒன்ராறியோவிற்கும் ரொறன்ரோ தேவை.


EASY HOME BUY

வீடு வாங்கவோ?
விற்கவோ?
**Buying?**
**Selling?**
**Mortgage**



*For a big decision Call*
**KIRUBA KIRUSHAN**
**416-414-5562**

*"Service with a broad smile"*

"WITH A SMALL DOWN PAYMENT YOU COULD OWN YOUR DREAM HOME"



J.R.B Universal Inc.

Almost All Services Available

• Loans • Mortages • Insurance claims • Traffic Tickets
• Insurance (Auto, Life) • Scholarship Plan (RESP)
• Real Estate Related • Credit Counseling • Accounting
• Tax Services • Any Referral Services



R.R.Rajkumar
B.Com (Hons) M.B.A.
Dip. In Accy.

Bus: 416-752-7555 Cell: 416-937-9081
2390 Eglinton Ave. East, Suite 206B., Scarborough, ON. M1K 2P5


## இனப்பற்று மிகுந்த இளம் வர்த்தகரின் இறுதி யாத்திரை





தமிழீழம் தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவில் ஸ்காபரோவில் வசித்து வந்தவருமான பிரபல தொழிலதிபர் தயாபரன் சங்கரசிவம் அவர்கள் கடந்த மாதம் 14ம் திகதி வாகன விபத்தொன்றில் சிக்கி அகால மரணமடைந்தார். குடும்ப உறவு, ஊர்ப் பற்று, சமூகப் பற்று ஆகியவைகளுடன் தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் பூரண நம்பிக்கை கொண்டிருந்த தயா, இனப் பற்று மிகுந்தவர் என்பதை அவரது இறுதிச் சடங்கு எடுத்துக் காட்டியது. தயாவின் பூதவுடல் மூன்று நாட்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது ஆயிரக் கணக்கான மக்கள் வாய்விட்டுக் கதறியழுது தங்கள் வேதனையைத் தீர்த்ததைக் காணமுடிந்தது. கனடா உலகத் தமிழர் இயக்கத்தின் மூத்த பிரதிநிதி திரு. குணம் உட்படப் பெருந்தொகையான சமூகப் பிரமுகர்கள் தங்கள் இரங்கலுரையில் தயாவின் தன்னலமற்ற பணிகளை எடுத்துக் கூறினர். அன்னாரின் பூதவுடல் இரட்டைக் குதிரை வண்டிலில் ஏற்றப்பட்டு தகனக் கிரியைக்கனக வீதி வழியாக எடுத்துச் செல்லப்பட்ட போது இருநூறுக்கும் அதிகமான வாகனங்கள் குதிரை வண்டிலின் பின்னால் சென்றன. ஈஸி ஜோம் பை அதிபர் கிருபாவின் மூத்த சகோதரரான தயா இரு பிள்ளைகளின் தந்தையாவார்.


நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிடஉரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்

• CRIMINAL
• DOG BITES
• SLIP & FALL
• ACCIDENT INJURIES

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

பின் இவரை அழையுங்கள்



416
490-9199

S.K.THEESAN
எஸ்.கே.தீசன்

அன்று இலங்கையில் கலகலப்பு
இன்று இன்றைக்கும் கலகலப்பு

www.kalakalappu.net

கலகலப்பு தீசன் 416-490-9199

## பல ஆண்டுகள் வெற்றியின் அனுபவங்கள்



**www.immigrationhelp.ca**
**416 757 7707**

அகதிக் கோரிக்கை
ஸ்பொன்சர்
அப்பீல்
Group Sponsor
Adoption
Visa

**www.trafficticketshelp.ca**
**416 757 7707**

Speeding
Stop Sign
Red Light
Careless
Accident Claims
Impaired - Over 80
Seal Belt
Improper Turns

**www.criminalmatters.ca**
**416 757 7707**

Over 80
Dangerous Driving
Assaults
Fraud
Theft under 5000
Bail Hearing
Young Offenders

**www. Call Peter Joseph. com**
**416 757 7707**


## றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வடஅமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மலி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேனிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

## மிஸிஸாகா ஜெயதுர்க்கா தேவஸ்தானம்

மிஸிஸாகா ஜெயதுர்க்கா ஆலயம் மிஸிஸாகாவில் 1808 Drew Road இல் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரி வழமையான வழிபாடுகளும், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூஜை ஆராதனைகளும் இடம்பெறுகின்றன. ஸ்ரீபஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் அவர்கள் ஆலயத்தின் பிரதம குருக்களாக அமைந்து நித்திய நைமித்திய பூஜைகளையும் உற்சவங்களையும் சிறப்பாக நடத்தி வருகின்றார். ஆலயத்துடன் இணைந்ததாக புதிய திருமண மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு 905 612 1856 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


**Century 21**

**Affiliate Reality Inc.**



வீடு வாங்குதல்
வீடு விற்றல்
அடமான ஒழுங்குகள் பற்றிய ஆலோசனைகள்

வாடகைப் பணத்தின் ஒரு பகுதியை உங்களுக்கெனச் சேமித்திடுவீர்!

*அழையுங்கள்:*
**திரவி. முருகேசு**

Business: 416-281-4900
Residence: 416-298-8643
Pager : 416-281-4900

**Thiravie Murugesu** B.A. <Ceylon>
Sales Representative.

11721 Sheppard Ave. East,
Toronto, ON.
M1B 1G3

**The Children's Education Trust of Canada**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற
சிவா கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139


# 2003ஆம் ஆண்டுக்கான வருமானவரி பற்றிய குறிப்புகள்

எஸ். காந்தி B.A (Sri Lanka)

அடுத்த மாதத்துடன் 2003 ஆண்டு எம்மிடம் இருந்து விடைபெறப் போகிறது. 2004ம் ஆண்டு தை மாதத்தில் இருந்து சித்திரை மாதத்துக்குள் நாம் எல்லோரும் 2003ம் ஆண்டுக்கான வருமான வரிப் பத்திரத்தினை பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும். இவற்றை நாம் நேர்த்தியாக சரிவர நிரப்பி அனுப்பும் போது மத்திய, மாகாண அரசுகள் தரும் சலுகைகள் எமக்குக் கிடைக்க வழியுண்டு. உதாரணமாக Child Tax Benefit பணக் கொடுப்பனவு, G.S.T Tax Credit விற்பனை சேவைகளின் மீதான வரியின் மீளளிப்புப் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பலருக்கு இவ்விடயங்கள் தெரிந்ததாக இருந்தாலும் சமீப காலத்தில் கனடா நாட்டுக்குக் குடிபெயர்ந்தவர்களுக்கு சில தகவல்கள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்.

பொதுவாக நம்மவர் சிலர் தற்காலிகமாக தொழில் முகவர்கள் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் தொழில் பார்ப்பவர்களாக இருப்பின் ஒவ்வொரு இடத்தில் உழைத்த தொகை செலுத்திய வரிகள் போன்ற விபரங்களை கவனமாக சேகரித்து வைத்தல் அவசியம். இது அவர்களுக்குக் கொடுக்கப்படும் காசோலை (cheque) உடன் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு துண்டுடன் (student of earning) இருக்கும். இவற்றை கவனமாக சேகரித்து வைத்தல் ஒரு தற்பாதுகாப்பான நடவடிக்கையாக அமையும். காரணம் பல தொழில் முகவர் நிறுவனங்கள் வருட முடிவுக்குள் பெயர் மாற்றம் பெறுகின்றன. சில இல்லாமலும் போய்விடுகின்றன. சிலருக்கு உழைத்த தொகையை விட கூடுதலாக உழைத்ததாக அரசாங்கத்துக்கு கணக்கு கொடுத்த சம்பவங்களும் உண்டு. பலருக்கு T4 slip என்னும் பத்திரம் வருட முடிவில் கிடைப்பதில்லை.

இந்த T4 slip என்னும் பத்திரம் தொழில் நிறுவனங்களால் ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் பத்திரம். இதில் குறிப்பிட்ட ஊழியர் அந்த வருடத்தில் உழைத்த தொகை வருமான வரியாக கழிக்கப்பட்ட விபரம், வேலை இல்லாத காப்புறுதிக்காக எடுக்கப்பட்ட விபரம், இளைப்பாற்று ஊதியத்துக்காக எடுக்கப்பட்ட தொகை, அந்த நிறுவனத்தில் தொழிற்சங்கம் இருந்தால் அதற்கு கொடுக்கப்பட்ட அங்கத்தவர் சந்தா பணத்தொகை போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இந்த T4 பத்திரம் வருமான வரிப் பத்திரத்தினை பூர்த்தி செய்து அனுப்புவதற்கு மிகவும் முக்கியமானதாகும். பொதுவாக 2003 ஆண்டுக்கான இப் பத்திரம் 2004ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதியில் இருந்தி மாசி மாதம் 28ம் திகதிக்குள் கொடுப்பது மரபாகும். காரணம் கூடிய வருமானம் உழைப்பவர்கள் 2003ம் ஆண்டுக்குரிய இளைப்பாற்று சேமிப்புத் திட்டத்தில் (Registered retirement saving plan) சேகரிப்பில் இடுவதற்கு இறுதி நாளாக பங்குனி 1, 2004 (March 1, 2004) இருப்பதாகும். ஆனால் இந்த மரபுகளை மீறி மாசி மாதம் 28ம் திகதிக்கு (Feb 28) பின்பும் கொடுக்கும் தொழில் நிறுவனங்களும் உண்டு.

அடுத்த முக்கிய விடயமாக இந்த வருட காலப் பகுதியில் நாம் முகவரியை மாற்றிக் கொள்ளும் பொழுது முன்பு தொழில் செய்த நிறுவனத்துக்கு எமது புதிய முகவரியைக் கொடுக்க மறந்தோமாயின் இப் பத்திரம் பழைய முகவரிக்கு சென்றுவிடும். இப்படியான சூழ்நிலை ஏற்படாது தவிர்த்துக் கொள்ளுதல் முன்னேற்பாடான நட்வடிக்கையாக அமையும். இது மாத்திரமல்ல உங்கள் முகவரி மாற்றத்தினை Canada custom and revenue agency உடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும். இதற்கான தொலைபேசி இலக்கம் 1-800-461-9999. இணையத் தளத்தின் மூலம் தொடர்பு கொள்ள www.ccra.ga.ca சென்று பார்க்கலாம்.

## புளூ காய்ச்சல் தடுப்பூசி

உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ரொறன்ரோ பொதுச் சுகாதார திணைக்களம் இலவச புளூ காய்ச்சலுக்கான தடுப்பூசிகளை ஒக்டோபர் 28ம் திகதியிலிருந்து நவம்பர் 29ம் திகதி வரையும், ஜனவரி 12ம் திகதியிலிருந்து ஜனவரி 15ம் திகதிவரையும் வழங்குகின்றது. ரொறன்ரோ நகரம் முழுவதும் பல வசதியான இடங்களில் இந்தத் தடுப்பூசி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முற்பதிவு தேவையில்லை. இந்த நிலையங்கள் பகலிலும், பின்னேரங்களிலும் திறந்திருக்கும்.

தடுப்பூசி நிலைய முகவரிகளுக்கும், மேலதிக விபரங்களுக்கும் 1-866-FLU-'N-YOU (1-866-358-6968) என்னும் இலக்கத்தையோ அல்லது www.toronto.ca/health என்னும் இணையத் தளத்தையோ தொடர்பு கொள்ளவும்.

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

## DR. M. ILLANGO

B.D.S. Dip. Orth (Oslo), General Practitioner Mainly Orthodontics
பற்களை ஒழுங்குபடுத்தும் பல்வைத்தியர்

**Dr. SABAPATHY RAVEENDRAN**
B.D.S, M.S, F.D.S.R.C.S (Eng), General Practitioner

**DR. ALI ADIPBFAR**
D.D.S, M.D, F.R.C.D (C), Plastic Surgeon

**Dr. MEHRAN MOJGANI**
D.D.S, Dip.Perio, Gum Specialist, பல்முரசு வைத்திய நிபுணர்

**Dr. JANAKI ILLANGO**
B.D.S, குடும்ப பல் வைத்தியர்

**Dr. FELOMINA NOLASCO**
B.D.S, குடும்ப பல் வைத்தியர்

**Dr. PANCHALINGAM KALAICHELVAN**
B.D.S, குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

ISSN 1206-0585


ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சி வஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சபபரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

## NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள் இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்